



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 ஆடவை நல்லோரை ஆனித் திங்கள் 7ம் நாள் நிறைமதி (21-06-2024 வெள்ளிக்கிழமை) வெளியீடு +94 21 222 9722



## மாணிக்கவாசகர் குருபூசை

ஆனித் திங்கள் 25ம் நாள் (யூலை 9), ஆனி மகம் விண்மீன் அன்று தென்னாட்டில் மாணிக்கவாசகப் பெருமானுக்கு குருபூசை விழா இடம்பெறும்.



# மயங்கா மரபுத் தமிழர்களின் தத்துவஞானிகளும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு மேலான தத்துவ ஞானமும்

தமிழர் தத்துவவியல் என்பது இற்றைக்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே உள்ளது என்றால் ஆச்சரியப்படாமல் மாறாக பெருமை கொள்ளுங்கள். தொல்காப்பியர், திருவள்ளுவ நாயனார் முதல் சந்தானகுரவர் மற்றும் அருணகிரிநாதர் காலம் வரை ஒவ்வொரு தமிழ் ஞானிகளும் பல தத்துவங்களை சொல்லிவந்துள்ளனர். ஆனால் அவை ஒன்றுடன் ஒன்று முரண்படாமல், பழைய கொள்கை, புதிய திருத்திய கொள்கை என்று இல்லாமல் ஒரே தத்துவத்தினை ஆழமாகச் சொல்லி நிற்கின்றன. எங்கள் தமிழ் எழுத்து இலக்கணத்தில் உயிர், மெய், உயிர்மெய் என்பதே மிகப்பெரிய தத்துவ உண்மை. தமிழர் தத்துவங்களை மற்றவர்கள் கரைக்காமல், களவாடாமல் இருக்கவேண்டுமாயின், நாங்கள் இவற்றை அறிந்துகொள்ள வேண்டும் மற்றும் பொதுசாயம் பூசி பொதுமறை ஆக்கக்கூடாது. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு.



தொல்காப்பியர்




சங்கப்புலவர் நக்கீரர்




திருவள்ளுவ நாயனார்



திருமூல நாயனார்



காரைக்கால் அம்மையார்



அப்பர் சுவாமிகள்




திருஞானசம்பந்தர் சுவாமிகள்



சுந்தரர் சுவாமிகள்



மாணிக்கவாசகர் சுவாமிகள்



மெய்கண்டதேவர்



அருணந்தி சிவாச்சாரியார்



மறைஞானசம்பந்தர்



உமாபதி சிவாச்சாரியார்

படங்கள்: இந்து கலாச்சாரத் திணைக்கள சமூகத் தளம் மற்றும் தென்னாடு

உ
திருச்சிற்றம்பலம்

தென்னாடு

# சைவ அறங்காவல் – முழுநாள் கருத்தரங்கு

இடம்: சங்கிலியன் அரங்கம் – வலம்புரி நட்சத்திர விடுதி
காலம்: ஆனித்திங்கள் 29ம் நாள் (13/07/2024)

ஆனி மகம் முத்தமிழ் வாதவூரர் குருபூசையை முன்னிட்டு, சைவநீதி மற்றும் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் சைவ மாணவர் சபை நடாத்தும் "சைவ அறங்காவல்" முழு நாள் கருத்தரங்கு ஆனித் திங்கள் 29ம் நாள் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கருத்தரங்கு குறிப்பாக சமய ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், இந்து இளைஞர் கழகங்கள், திருக்கோயில் அறங்காவலர் சபையினர், பல்கலைக் கழக இந்து மாணவர் சங்கங்கள், மற்றும் சைவ சமயத் தலைவர்களை கருத்தில் நிறுத்தி வடிவமைக்கப்பட்டுள்ளது.

நிகழ்ச்சித் தலைமை
சிவத்திரு.செந்தமிழாதன்
(இளம்புலவர். தென்னாடு.)

"திருமுறைச் சிறப்பு மற்றும் சாத்திரச் சிறப்பு"
செந்தமிழருசு முனைவர்.கி.சிவகுமார்
(தமிழ்நாடு)

"இலங்கையில் சைவம் அன்றும் இன்றும்"
சிவத்திரு.சந்திரமௌலீசன் லலீசன்
(அதிபர். கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.)

"வேண்மைகொள் சைவநீதி"
சிவத்திரு.குணா துரைசிங்கம்
(தலைவர். சைவநீதி)

"சைவ அறங்காவல்"
சிவத்திரு.குமரரத்தினம் பார்த்தீபன்
(முதல்வர் . தென்னாடு.)

பங்குபற்ற விரும்பும் சைவத் தலைவர்கள் ஆனித் திங்கள் 17ம் நாளுக்கு (1-யூலை-2024) முன்னதாக இந்த இணைப்பில் பதிவு செய்துகொள்ளுங்கள். இந்தக் கருத்தரங்கிற்கு நூறு இருக்கைகள் என மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் பதிவு ஒழுங்கில் முன்னுரிமை கொடுக்கப்படும்.

வழங்கல்கள்:
(1) காலை, மாலை – சிற்றுண்டி மற்றும் குளிர்பானம் / தேநீர்
(2) மதிய உணவு
(3) பங்குபற்றியமைக்கான சான்றிதழ்
(4) தேவை அடிப்படையில் போக்குவரத்துக்கு கொடுப்பனவு

பதிவு செய்ய அழையுங்கள்
0707701111.
https://www.thennadu.org/nikalvuviparam.php?id=6

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம், கொக்குவில்.



உ
சிவமயம்

அருள்மிகு மாணிக்கவாசகப் பெருமானின்
குருபூசையை முன்னிட்டு

ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம்
திருக்கேதீச்சரம் திருவாசக மடத்தால்
09.07.2024 செவ்வாய்க்கிழமை
நடத்தப்படும்

# திருவாசகப் பெருவிழா

திருவருட் தலைமை
ஸ்ரீமத் மௌன மீனாட்சி சுந்தர தம்பிரான் சுவாமிகள்
(தருமபுர ஆதீனத் திருக்கேதீச்சரக் கிளைமடம்)

தலைமை
சிவநேயத்திருமதி லோகநாயகி அருளலிங்கம் அம்மையார்
தலைவர் - ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம் - திருவாசகமடம்

ஆன்மார்த்த சிவபூசை
காலை 6.00 - 7.00 மணி
சிவனடியார் ஒன்றுகூடி செய்யும் ஆன்மார்த்த சிவபூசை நிகழ்வு

திருவாசக இசை உரை அரங்கு
காலை 9.00 - மதியம் 12.30 மணி
தேனிசை வேந்தர் திருவாசகம் வே. சிவஞானம் அவர்கள் நினைவாக சிவனடியார் திருக்கூட்டம்
சைவப்புலவர், சித்தாந்த செம்மணி, சைவத்திரு செல்லையா நவநீதகுமார் - சைவப்புலவர், கலாநிதி சிவத்திரு.த.அனுசாந்தன் - சங்கீதபூஷணம், சைவத்திருமதி ஹம்சாநந்தி தர்மபாலன்

திருவாசக உரை அரங்கு
பிற்பகல் 2.30 - மாலை 6.00 மணி
சிவத்திரு மீ. சிவசண்முகம் பெருமகனார்
சிவத்திரு. செந்தமிழரசு கி. சிவகுமார் பெருமகனார்
ஈழத்துச் சிவநேயச்செல்வர் உரைகள்

நிகழிடம் : ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம் திருவாசகமடம், கோயில் வடக்கு வீதி, திருக்கேதீச்சரம்.

முக்காலமும் மாகேசுவரபூசை நடைபெறும்.
சைவப்பெருமக்கள் அனைவரும் வருகைதந்து திருவாசகத்தைப் போற்றும் சிவப்பணி சிறக்க உறுதுணை வழங்குமாறு வின்னப்பிக்கின்றோம்.

தொடர்பு அலைபேசி - 077 028 1317


# கொழும்பு தமிழ் சங்கத்தில் இசைத்தமிழ் விழா



உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் மூன்று நாள் "இசைத் தமிழ் விழா" கடந்த மே 31, ஜூன் 1,2 ஆகிய நாட்களில் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்றது.

அந்தவகையில் முதலாம் நாள் நிகழ்வு கொழும்பு தமிழ்ச் சங்கசங்கரப்பிள்ளை மண்டபத்தில் சங்கத் தலைவர் கலாநிதி க. இரகுபரன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் சுவாமி விபுலானந்தர் சிலை சைவ மங்கையர் வித்தியாலயத்திலிருந்து ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு, தொடர்ந்து இராமகிருஸ்ண மிஷன் தலைவர் தவத்திரு. சுவாமி அக்ஷராத்மானந்த ஜீ அவர்கள் மாலை அணிவித்தபின் ஞானசேகரன், ஞானலக்ஷ்மி தம்பதியினர் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைக்க, தொடர்ந்து நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

இரண்டாம் நாள் நிகழ்வு கொழும்பு சட்டபீட பேராசிரியர் அ. சர்வேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா உரையாற்றல், திணைக்கள உதவிப்பணிப்பாளர் ஹேமலோஜினி குமரன் அவருக்கான யாழ் நூலினை வழங்கல், தொடர்ந்து பேராசிரியர் அ. சர்வேஸ்வரன், கே. பொன்னுத்துரை ஆகியோருக்கு நூல்கள் வழங்கல் என்பன இடம்பெற்றிருந்தன.

மூன்றாம் ஆம் நாள் நிகழ்வு முன்னாள் செயலாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் தலைமையில் திருமதி. சாந்தகுமாரி சுந்தரலிங்கம் தம்பதிகளின் மங்கள விளக்கேற்றுகையை தொடந்து ஆரம்பமானது, தொடர்ந்து சாந்தகுமாரி சுந்தரலிங்கம் மற்றும் விருந்தினர்களை கௌரவித்து, "விபுலானந்தர்" நூலினை உதவிப் பணிப்பாளர் ஹேமலோஜினி குமரன் வழங்கி வைத்தார். மேலும் மயூரபதி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும், திருமதி. சுவர்ணலதா பிரதாபனின் இசை அளிக்கை போன்ற நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தன.

நிகழ்வில் நிறுவப்பட்ட திருவுருவச்சிலையானது, கொழும்பு தமிழ்ச்சங்க வரலாற்றில் முதல் தடவையாக நிறுவப்பட்ட சிலையாக அமைகின்றது.

திருச்சிற்றம்பலம்


World Saiva Council (Australia) Inc.
உலக சைவப் பேரவை (அவுஸ்திரேலியா)
அவுஸ்திரேலியா
6 Dudley Street , Auburn NSW 2144

wsca.org.au@gmail.com
www.wsca.org.au

# சிவஞான சித்தியார் பயிற்சி

அன்புடையீர்,

சைவ சித்தாந்த அறிமுக வகுப்பைத் தொடர்ந்து, உலக சைவப் பேரவை, இந்த சிவஞான சித்தியார் பயிற்சி வகுப்பை நடாத்தவிருக்கிறது. சைவ சித்தாந்தத்தை மிகவும் விரிவாக எடுத்துரைக்கும் நூல் அருள் நந்தி சிவாசாரியாரால் அருளப் பெற்ற சிவஞான சித்தியார் ஆகும். மெய் கண்டாரின் சிவஞான போதத்தை அடிப்படையாகக் கொண்டு அதற்கு விரிவுரையாக எழுதப்பட்ட நூலாகும். பலரும் சைவ சித்தாந்தத்தை விரிவாக கற்க ஆவலாய் இருப்பதால், அதன் தேவையை மனதில் கொண்டு, உலக சைவப் பேரவை இந்த பயிற்சி வகுப்பினை ஒழுங்கு செய்து இருக்கிறது.

இப்பயிற்சியானது, 10 வகுப்புகள் கொண்ட 4 பாகமாக Zoom இணைய வழி மூலம் நடைபெற இருக்கிறது. சிவஞான போத சூத்திரத்தை அடிபொற்றி அதற்கான சித்தியார் பாடல்கள் விபரிக்கப்படும்.

21-07-2024ம் தேதி முதல் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 7:00 (AEST) மணி முதல் 8:30 (AEST) மணி வரை, தொடர்ந்து 10 வகுப்புகளாக முதல் பாகம் நடைபெறவிருக்கிறது. அனைவரும் பங்குபெற்று பயனடையுமாறு வேண்டுகிறோம். உலக சைவப் பேரவையின் அங்கத்தினருக்கு 10 வகுப்பிற்கு $10/- எனவும், ஏனையோருக்கு 10 வகுப்பிற்கு $20/- கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பயிற்சியின் சிறப்புகள்:

1. பதிவு செய்தோர்க்கு பாடத்தின் விளக்கக் காட்சிகள் வகுப்பிற்கு முன்னர் அனுப்பி வைக்கப்படும்
2. பதிவு செய்தோர்க்கு youtube ஒளிப்பதிவு வகுப்பிற்கு மறுநாள் (திங்கட்கிழமை) கிடைக்கும்.
3. ஒவ்வொரு 10 வகுப்பிற்கு பிறகும் ஓம்படை ஒன்று அளிக்கபடும். குறைந்த பட்சம் 80% வருகைப் பதிவும், 3 ஓம்படைகளை பூர்த்தி செய்து வெற்றி பெறுபவர்க்கு "சிவஞானச் சிந்தையர்" எனும் பட்டமும் சான்றிதழும் வழங்கப்படும்
4. சிவஞான போத நூலின் சூத்திரங்களை அடிபொற்றி வகுப்புகள் நடைபெறுவதால், சிவஞான போதம் நூலையும் சிந்தித்தப் பயன் உண்டாகும்.
5. ஒவ்வொரு வகுப்பின் முடிவிலும் கேள்வி-பதில் மற்றும் பாடச் சிந்தனைகளுக்காக 10 நிமிடம் வரை ஒதுக்கப்படும்.

வகுப்பாசிரியர்கள்:

1. சிவதிரு. முனைவர்ச. கணபதிப்பிள்ளை
2. சிவதிரு. இளங்கோ
3. சிவதிரு. கேசினி கோணேஸ்வரன்
4. சிவதிரு. ஹ.விஜய் சிங்

பங்குபெற விரும்புவோர் wsca.org.au@gmail.com என்ற மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளவும். 15-07-2024ம் தேதிக்கு முன்னதாக பதிவு செய்தல் அவசியம்.

WSCA Bank details : World Saiva Council - BSB :633-000 Account No:130 667 116.
Please mention "Your short name - Sithiyar" in the payment description section.

மேலதிக விபரங்களுக்கு :
சிவதிரு. விஜய் சிங் : +61 478 313 200 (ஒருங்கிணைப்பாளர்) சிவதிரு. இளங்கோ : +61 406 637 013
சிவதிரு. கேசினி கோணேஸ்வரன் : +61 422 791 185 சிவதிரு. சபாநாதன் : +61 408 432 680

தென்னாடு
www.thennadu.org

சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்
தலைமை ஆசிரியர் – தென்னாடு,
+6149949 3300, thennavan@thennadu.org



# மக்களைத் தம்மதத்திற்கு இழுக்கும் மதமே ஒருநாள் மதம்மாறும்

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு - (குறள் - 423)**

மதம் என்றால் மதித்து நடப்பது. ஒரு நூலையோ அல்லது இறை தூதரர்கள், இறைவனின் அவதாரம் என்று போற்றப்படுபவர்கள் சொன்ன வற்றை மதித்து நடக்கும் முறையே மதம் ஆகும். அத்துடன் மதத்துடன், அந்த மதம் தோன்றிய மண்ணின் பண்புகள் நிறையவே கலந்திருக்கும். மதத்தினை மதித்து நடப்பவர்கள், அந்த பண்பினையும் மதித்து நடக்க வேண்டும்.

மதம் என்ற சொல்லுக்கு செருக்கு, வலிமை, களிப்பு, தேன், மதப்பு, மயக்கு, மதர்ப்பு (செருக்கு),மதனம் (காமம்),மதுரம் (இனிப்பு) என்று பல வேறு பொருள்களும் உண்டு.

சமயம் என்றால், ஒருவரை சமைத்து அதாவது பண்படுத்தி மேல்நிலைக்கு உயர்த்துவது என்று பொருள். இங்குள்ள மெய்ப்பொருள் உண்மையை உணர்ந்து, அதன்வழி நின்று மேன்நிலை அடைவது உயிர்களின் நோக்கமாகும். ஆகவே, இங்கு இலக்கியம் சொன்னாலும், இறை தூதர்கள் சொன்னாலும், இறை மறுப்பாளர்கள் சொன்னாலும், ஏன் இறைவனே சொன்னாலும் அதனை பகுத்து பார்த்து, மேலும் மேலும் கேள்விகளைக் கேட்டு உள்ளார்ந்த கருத்தினை அதாவது மெய்ப்பொருள் உண்மையை அறிந்து செயல்படுவதே சிறப்பு. இந்த சிந்தனைத்திறன் அற்றுப்போகின்ற நிலைமையால் தான், இறை மறுப்பாளர்கள் மற்றும் மதத்திற்கு இழுக்கும் மதவாதிகளின் அர்த்தமற்ற பேச்சுக்கள் மக்களை இலகுவாக வளைக்கின்றன.

**ஆத்தம் ஆனார் அயலவர் கூடி,**
**நாத்திகம் பேசி, நாத் தழும்பு ஏறினர்**

**சமய வாதிகள் தம் தம் மதங்களே**
**அமைவது ஆக, அரற்றி, மலைந்தனர்** – திருவாசகம்

ஆக, இனி வரும் சமுதாயப் பிள்ளைகள், அவர்களின் அறிவு வளர்ச்சி மற்றும் காலச் சூழ்நிலை மாற்றங்களால், சுயமாகச் சிந்தித்து அறியும் அதன் அறிவுவழி நடக்கும் காலம் வரும். குறிப்பாக தனிமனித சுதந்திரத்தினை மதிக்கும் நாடுகளில் இது இன்னும் சிறப்பாக வரவேற்கப்படும். நிச்சயமாக அது எங்கள் தாய் நிலத்திலும் வரும்.சிந்திக்கத் தொடங்கும் பொழுது மதமாற்றிகளின் இழுவைகளின் திசை தானாகவே மாறி மெய்ப்பொரு ளின் பக்கமான இழுவை அறிவுப்பூர்வமாக கூடி நிற்கும்.

அப்படியான நிலைமை வரும்போது, விழுந்தாலும் மீசையில் மண் படக்கூடாது என்பதுபோல், தங்கள் சென்ற பாதையே சரி என்ற விறுமாப்புடன், மேலும் வீரவசனம் பேசுவர். அத்துடன் தமிழர் மரபில் வந்த, தென்னாட்டு நிலத்திற்குரிய கலை,பண்பாட்டு, சமய மற்றும் கிரிகையின் கூறுகளை தமதாக்கிக்கொள்வர். வழிபாட்டு இடங்களில் கோபுரங்கள் மலரும், மணியோசை கேட்கும், சங்கொலி முழங்கும்,திருவாசி பின்நிற்கும், கும்பம் தோரணம் என்று வரவேற்புப் பொங்கும், அரோகரா என்று ஒலிகேட்கும் இதிலும் நாம் சுயபுத்தியைப் பயன்படுத்தி தப்பிக்கொள்ளவேண்டும். மெய்ப்பொருள் தேடுவோர் நிச்சயம் எங்களை தேடுவர். உலகத்தினை உணருவர். மதவெறி தவிர்ப்பார். மனிதத்துடன் வாழ்வர்.

தமிழர் மரபில் வந்த, சைவ சமயத்தினைப் பின்பற்றும் நாங்கள் அதனுள் இருக்கும் கிரிகைகளை பின்பற்றுவதுடன் மட்டும் நிறுவிடாது, உள்ளே இருக்கும் தத்துவச் சிறப்பையும்,சமூக நீதியையும், சாத்திர மற்றும் தோத்திரச் சிறப்பையும், தமிழ் வேதமாகிய அறம், பொருள், இன்பம் மற்றும் வீடு தொடர்பான ஆழ்ந்த கருத்துக்களையும், மேலாக வாழ்வியல் வழிகளையும் சிறிதளவேனும் உணருவோமாயின், இந்த மதமாற்றப் பொறியில் சிக்காமல் இம்மையிலும் மறுமையிலும் பெருவாழ்வை பெறுவோம் என்பது திண்ணம்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.**

# திருக்கேதீச்சரத்தில் திருமுறை சேர்ந்திசை விண்ணப்பம்



இலங்கை இந்து கலாசார அமைச்சு அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த 19-05-2024 அன்று காலை 9.00 மணியளவில் மன்னார் கௌரியாம்பாள் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வு திணைக்களத்தின் பணிப்பாளர் சிவத்திரு. யதுகுலசிங் அநிருத்தனன் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராசா அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்கள். அன்றைய தினம் மாலை 3.30 மணியளவில் திருக்கேதீச்சர மண்டபத்தில் பேராசிரியர் பாலசந்திர ஓதுவார் மூர்த்திகள் மற்றும் கலாநிதி சிவகௌரி கிரீஷ்குமார் அம்மையார் அவர்களின் வழிப்படுத்தலில் திருமுறை சேர்ந்திசை விண்ணப்ப நிகழ்வும் இடம்பெற்றன.

இத்திருமுறை சேர்ந்திசை விண்ணப்ப நிகழ்வில் இலங்கை இந்து கலாசார அமைச்சு அலுவல்கள் திணைக்களத்தின் இணையவழி பண்ணிசை பயிலுனர்கள், ஆசிரியர்கள், அறநெறிப்பாடசாலை மாணவர்கள், திணைக்கள உத்தியோகத் தர்கள் ஆகியோர் இணைந்து திருமுறை சேர்ந்திசை விண்ணப்பம் செய்தனர். இலங்கைத் திருநாட்டின் பல பாகங்களிலும் இருந்து 400 இற்கு மேற்பட்ட அடியார் குழாம் பாலாவியின் கரைமேல் பண்ணிசை ஒலித்த அருள்நிகழ்வாக இது அமைந்திருந்தது.

மேலும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அவர் களின் வழிகாட்டலுக்கு அமைய அருள்மிகு திருக்கோணேச்சர திருத்தலத்தில் திருஞான சம்பந்தர் குருபூசை நிகழ்வும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் மாவடிசேனை இந்து மகா வித்தியாலயம் வெருகலில் தர்மாசிரியர் பரீட்சைக்கான பயிற்சிப் பட்டறையும், கடந்த 25-05-2024 அன்று மாவட்ட செயலகத்தினால் முன்னெடுக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

**திருச்சிற்றம்பலம்**

# சிவ வழிபாடு ஆற்றும் தகமை பெற்றார் தென்னரசு

**என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே.**

சைவத்தினையும், தமிழினையும் சென்ற இடமெல்லாம் சிறப்புறச் செய்யும் தமிழர் மரபு தொன்றுதொட்டு தமிழரின் உயரிய பண்பாக இருந்து வருகிறது. அதற்கேற்ப யாழ்ப்பாணம் கோண்டாவிலைச் சேர்ந்த சிவத்திரு. சோமசூரியசிங்கம் காண்டீபன் அவர்களின் சிந்தையில் திருவருள் துணைநின்று வெளிப்படுத்தியதன் விளைவாக, அயர்லாந்துத் தீவின் மத்தியில் அமைந்திருக்கும் அத்தலோன் மாநகரத்தில் தமிழ் கடவுளாகிய முருகனுக்கு திருக்கோயிலை நிறுவி, திருக்கோயிலின் தலைமை அருச்சுனையராக வழிபாடுகளையும் ஆற்றி வருகின்றார்.



கோண்டாவிலிருந்து அயர்லாந்து சென்று, அங்கு நிறுவிய முருகன் திருக்கோயிலில், தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் வழிப்படுத்தலில் செந்தமிழ் வழிபாடுகளை ஆற்றிவரும் சிவத்திரு. சோமசூரியசிங்கம் காண்டீபன் அவர்களிற்கு, கடந்த வைகாசித் திங்கள் 10ம் நாள் (23-05-2024) நிறைமதி அன்று, தென்னாடு ஐம்பூதநாதர் திருக்கோயிலில், அருட்குருநாதர் ஒளியகம் ந. ஒளியரசு ஐயா அவர்களினால் சிவ வழிபாடு ஆற்றும் தகமையான நோன்மை தீக்கை (விசேடம்) வழங்கி வைக்கப்பட்டது. மேலும் அவருக்கு 'தென்னரசு' என்ற தீக்கை நாமமும் வழங்கி வைக்கப்பட்டது.

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் வழி நின்று, சைவத்தமிழ் பண்பாட்டினை வளர்க்கும் பணியில் தன்னை அர்ப்பணித்து செயற்பட்டுவரும் சிவத்திரு. தென்னரசு (சோமசூரியசிங்கம் காண்டீபன்) அவர்களை போற்றி வாழ்த்துவதோடு, சைவ சமயம் மற்றும் தமிழ் மொழியினை உலகெங்கும் எடுத்துச் செல்லவும் மற்றும் அடுத்த தலைமுறைக்கு ஊடு கடத்தவும், எல்லாம் வல்ல கொக்குவில் தென்னாடு அருள்மிகு மனோன்மணி அம்மை உடனுறை அருள்மிகு ஐம்பூதநாதப் பெருமான் துணை நிற்க வேண்டி விண்ணப்பம் வைக்கின்றோம்.

**திருச்சிற்றம்பலம்**

# தமிழ்வேதமாகிய திருக்குறளில்

# தமிழர் தத்துவம் சைவசித்தாந்தம்

ஆலத்தூர் கிழார் பாடிய புறநானூற்றுச் செய்யுள் ஒன்றில், திருவள்ளுவர் அருளிச் செய்த **"எந் நன்றி சொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந் நன்றி கொன்ற மகற்கு"** என்னும் குறட்பாக் கருத்து இடம் பெறுகின்றது அந்தப் புறநானூற்றுப் பகுதி வருமாறு,

**"நிலம் புடை பெயர்வ தாயினும், ஒருவன்**
**செய்தி கொன்றோர்க்கு உய்தி இல் என,**
**அறம் பாடிற்றே ஆயிழை கணவ"**

காக்கைப் பாடினியார் காலம் கி.பி.100 என்றும், கிள்ளிவளவன் காலத்தில் வாழ்ந்த ஆலத்தூர்கிழார் காலம் கி.பி 200க்கு முற்பட்டது என்றும் வரலாற்றுப் பேராசிரியர்கள் கருதுகிறார்கள், **"புலான் மறுத்தல்"** எனனும் அதிகாரத்தில், திருவள்ளுவர் பௌத்தமதக் கொள்கையை மறுத்துப் பேசுகிறார், எனவே, திருவள்ளுவர் கௌதம புத்தர் காலத்திற்குப் பிற்பட்டு வாழ்ந்தவர் என்பது பெறப்படும். மணி மகலையில் **"தெய்வம் தொழா அள்"** எனத்தொடங்கும் திருக்குறட்பாக் கருத்தை எடுத்தாளும் பொழுது, சாத்தனார் திருவள்ளுவரைப் **"பொய்யில் புலவன்"** என்று குறிப்பிடுகின்றார், இவற்றை யெல்லாம் கருத்தில் கொண்டு சிந்திக்கும் பொழுது திருவள்ளுவர், காக்கைப் பாடினியார் காலத்திற்கு முற்பட்டவர் (கி. பி. 100) என்பதும், கௌதம புத்தர் காலத்திற்குப் பிற்பட்டவர் (கி.மு.300) என்பதும் பெறப்படும், எனவே, திருவள்ளுவர் (கிறித்து பிறப்பதற்கு முப்பத்தொரு ஆண்டுகட்கு முன்பு) கி.மு. 31-ல் வாழ்ந்தவர் என்பது பொருந்தும்.

வெளிநாட்டு மதக் கொள்கைகளைத் தமிழ் நாட்டில் பரப்ப வேண்டும் என்னும் குறுகிய நோக்கத்தில், தமிழ் அறிவே இல்லாத ஒரு சிலர், திருவள்ளுவர் கிறித்துவுக்குப் பின்பு தோன்றியவர் என்று கூறுவார்கள். அவர்களது உள்நோக்கம் தெளிவாக உள்ளதால், அக்கருத்தில் ஓரவாரம் உள்ளது என்பது இனிதே பெறப்படும். படவே, அக்கருத்து புறக்கணிக்கப்பட வேண்டியதாகும்.

திருவள்ளுவர் வாழ்க்கை வரலாறு இஃது என அறுதி யிட்டுக் கூறும் முறையில் இல்லை, திருக்குறளில் **"குரு வணக்கம்"** என்று ஒரு பகுதி இல்லை, எனவே, திருவள்ளுவர் ஓதாது உணர்ந்த பெரியவராக இருக்க வேண்டும். திருமுறை ஆசிரியர்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர்,சுந்தரர், மணிவாசகர் முதலிய பெரியவர்கள், இறைவன் திருவருளால் உணர்த்தப் பெற்றுத் தம் கருத்துக்களைக் கூறியருளியுள்ளனர். அவர்களைப் போலவே திருவள்ளுவரும் இறைவன் திருவருளால் உந்தப்பட்டு இந்நூலை அருளிச் செய்திருக்க வேண்டும். இவர் பெயர்க்கு முன் திரு என்னும் அடைமொழி சேர்க்கப் பெற்றது மற்றும் தெய்வப் புலவர், பொய்யில் புலவர், முதற்பாவலர், பெருநாவலர், செந்நாப் போதார், நாயனார் முதலிய திருப் பெயர்களை உடையவராகத் திருவள்ளுவர் திகழ்வதால் இவ்வுண்மை புலப்படும்.



செந்நெறிச் செல்வர் அமரர் சிவத்திரு.கு.வைத்தியநாதன் திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மைய முதல்வர்

சைவ சமயப் பெரியோர்களை, **"நாயனார்"** என்னும் சொல்லை அவர்தம் பெயர்க்குப் பின்ஒட்டுச் சொல்லாகச் (Suffix Agglutination) சேர்த்துப் போற்றி வழங்குவது நமது சமய மரபாயுள்ளது. அதுபோலவே குறளாசிரியரைத் **"திருவள்ளுவ நாயனார்"** என்று கூறும் வழக்கு தமிழகத்தில் உள்ளது, எனவே, திருவள்ளுவர் மற்றைப் புலவர்கள் போல் அன்றி,

ஓதாது உணர்ந்த சான்றோர்கள் வரிசையில் வைத்து எண்ணத் தக்கவர் ஆவர். அதுபற்றியே திருவள்ளுவரை **"அர்"** விகுதியிட்டுப் பேசுகிறோம். கம்பனை **"அன்"** விகுதியிட்டுப் பேசுவது போல் திருவள்ளுவரைப் பேசுவது, அவரது உண்மை இயல்பினை அறியாதார் செயலே ஆகும்.

பன்னிரு திருமுறைகளில் பெரும்பாலான இடங்களில் திருக்குறட் கருத்து இடம் பெற்றுள்ளன. சிறப்பாக சைவ சமய ஆசாரியார்கள் நால்வர் வாக்கிலும் திருக்குறட் கருத்துகள் மலிந்து காணப்படுகின்றன. திருஞானசம்பந்தப் பெருமான் அருளிச்செய்த திருஆப்பனூர்ப் பதிகத்தில்,

**அகர முதலானை அணியாப்ப னூரானைப்**
**பகரும் மனம் உடையார், வினைப்பற்று அறுப்பாரே**
*(1-88-5)*

என்றுவரும் தேவாரத்தில், **"அகர முதலானை"** என்று அமைந்த தொடர் திருவள்ளுவரின் இறைக் கொள்கையினைக் குறிக்கின்றது. திருஞானசம்பந்தப் பெருமான் ஓதாது உணர்ந்த பெரியவர். இப்பெருமானின் திருவாக்கில் திருக்குறட் கருத்து வெளிப்படுவதற்கு என்ன பொருள்? திருவள்ளுவர் அருளிச் செய்த திருவாக்குகள் அனைத்தும் தெய்வத்தன்மை உடையன என்பதை மெய்ப்படுத்தும் பொருட்டுத் திருமுறையாசிரியர் களின் திருவாக்குகளில் அவை இடம் பெற்றுள்ளன என்பதே அதற்குப் பொருளாகும். ஆகவே, திருவள்ளுவர் ஓதாது உணர்ந்த பெரியார் என்பதும், அப்பெரியவரை அதிட்டித்து நின்று, சிவபெருமானே திருக்குறளை அருளிச்செய்துள்ளான் என்பதும் வெள்ளிடைமலை.

திருக்குறளில் சிவாகமச் செய்திகள் மிகவும் மலிந்து காணப்படுகின்றன. சிவாகமங்கள் தமிழில் தோன்றி, பின்பு வடமொழி ஆக்கம் செய்யப்பட்டவை என்பது ஆய்வாளர்கள் கருத்து. திருமூலர் காலத்திற்கு முன்பே இந்த வடமொழி மாற்றம் நடந்திருக்கிறது.

**"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யு மாறே"** *81*

என்று திருமூலர் அருளிச் செய்திருப்பதிலிருந்து இவ் வுண்மை புலப்படும்.

திருக்குறளில், பதி, பசு, ஆணவம், கன்மம், மாயை என் னும் சிவாகமச்சொற்கள் முறையே, இறைவன், மன்னுயிர், இருள்,வினை, மருள், என்னும் தமிழ்ச் சொற்களில் அமைந்துள்ளன. சத்துவம் இராசதம். தாமதம் என்னும் உயிர்க்குணங்கள் மூன்றும் முறையே காமம், வெகுளி, மயக்கம் என்னும் சொற்களில் வருகின்றன. **"பரமுத்திநிலை"** என்பது **"பேராஇயற்கை"** *370* என்னும் தொடரில் காட்டப்படுகிறது. சிவத்தை அன்பு என்றும், சத்தியை அருள் என்றும் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.


திருக்குறள் உரைப்பாயிரத்தில், பரிமேலழகர் " மாந்தர்க்கு உறுதி என உயர்ந்தோரால் எடுக்கப்பட்ட பொருள் நான்கு. அவை அறம் பொருள் இன்பம் வீடு என்பன. அவற்றுள் **"வீடு"** என்பது, **"சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து"** என்று கூறியுள்ளார். இதிலிருந்து திருக்குறள், உயிர்க்கு உய்தி பயக்கும் நான்மறைச் செய்திகளைத் தெளிவாக எடுத்தியம்புகிறது என்பது இனிதே பெறப்படும்.

இன்னோர் அன்ன பன்னூட் பொருளைத் தன்னுள் அடக்கி இலங்கும் திருக்குறட் கருத்துக்களைக் கீழ்க்காணும் ஐந்து தலைப் புக்களில் வைத்துச் சிந்திப்பது பயனுடையதாகும் எனக் கருதுகிறேன்.

1. திருக்குறளை அணுகு முறை.
2. தெய்வத் திருமுறைகளில் தெய்வப்புலவரின் திருவாக்குகள்
3. திருக்குறள் நெறிக்குப் பிறசமயக் கொள்கைகள் பொருந்தாமை (பரபக்கம்)
4. திருக்குறள் நெறி சைவ சித்தாந்தமே (சுபக்கம்)
5. திருக்குறள் சைவர்களின் வேதமே.

**தமிழ்வேதம் தொடரும்...**


## ஆரம்பகால திருவள்ளுவர் திருவுருவங்கள்








இடப்பக்கம் உள்ள சிலை

















தென்னாடு
செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org



# தென்னாடு நிறைமதி அறிக்கை

(20-05-2024) – வைகாசித் திங்கள் வளர்பிறைக் கழுவாய் வழிபாடுகள் இடம்பெற்றன.

(22-05-2024) – தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் மற்றும் மனோன்மணி அம்மை உடனுறை ஐம்பூதநாதர் திருக்கோயிலின் நான்காவது ஆண்டு நிறைவு சங்குநீராட்டு வழிபாடுகள் இடம்பெற்றன. இவ்வழிபாடானது அதிகாலை 4 மணியளவில் ஆரம்பமாகி 6.30மணியளவில் அடியார்களிற்கு அமுது செய்வித்தலுடன் நிறைவு பெற்றது. இவ்வழிபாட்டுக் கிரியைகளை தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்திருந்த ஒளியகம் ந. ஒளியரசு ஐயா அவர்கள் ஆற்றி வைத்திருந்தார்.

(23-05-2024) – கோண்டாவிலிருந்து அயர்லாந்து சென்று, அங்கே தமிழ் கடவுளாகிய முருகனுக்கு கோயில் ஒன்றை ஆரம்பித்து, தென்னாடு மடத்தின் வழிப்படுத்தலில் செந்தமிழ் வழிபாடுகளை ஆற்றிவரும் சோமசூரியசிங்கம் காண்டீபன் அவர்களிற்கு நோன்மை தீக்கை (விசேடம்) வழங்கல் இடம்பெற்றது. அருட்குருநாதர் ஒளியகம் ந. ஒளியரசு ஐயா அவர்கள் தீக்கை வழங்கி வைத்தார். மேலும் அவருக்கு **'தென்னரசு'** என்ற தீக்கை நாமமும் வழங்கி வைக்கப்பட்டது.

(23-05-2024) – தென்னாடு அருள்மிகு மனோன்மணி அம்மை உடனுறை ஐம்பூதநாதர் திருக்கோயிலில், நிறைமதி வழிபாடும் நாற்பத்து ஐந்தாவது இதழ் வெளியீடும் எம்பெருமான் திருவருளுடன் சிறப்பாக இடம்பெற்றிருந்தது. இந்நிகழ்வில் தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்திருந்த, அருட்குருநாதர், சைவத்தமிழ்மணி கயிலைமணி ஒளியகம் ந. ஒளியரசு ஐயா அவர்கள், மறவன்புலவு சச்சிதானந்தம் ஐயா அவர்கள், வலம்புரி விடுதி உரிமையாளர் ஜெகன் அவர்கள், அயர்லாந்து நாட்டிலிருந்து வருகை தந்திருந்த சிவத்திரு. சோமசூரியசிங்கம் காண்டீபன் (தென்னரசு) ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

மேலும் அன்றைய தினம் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவ மடத்தின் நான்காவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, தென்னாட்டுடன் இணைந்து பயணித்து தங்களின் சேவையை வழங்கி தொண்டாற்றி வருபவர்களுக்கான சிறப்பு செய்யும் நிகழ்வும் இடம்பெற்றது. அந்த வகையில் வலம்புரி விடுதி உரிமையாளர் சிவத்திரு தியகராஜா ஜெகசீலன் அவர்கள், அயர்லாந்து நாட்டிலிருந்து வருகை தந்திருந்த சிவத்திரு. சோமசூரியசிங்கம் காண்டீபன் (தென்னரசு) அவர்கள், தென்னாடு மற்றும் சைவ மாணவர் சபையை சேர்ந்த சிவத்திரு. முருகேசு ஜோதீஸ்வரன் அவர்கள், சிவத்திரு. வனராஜ் சசிராஜ் அவர்கள், சிவத்திரு. ஜீவரட்ணராஜா சஜீவன் அவர்கள், சிவத்திரு. ரவீந்திரன் கஜீவன், சிவத்திரு. தென்னாடு நிலவன் அவர்கள், சிவத்திரு. சிவானந்தராஜா ஐயா அவர்கள், செந்தமிழ் அர்ச்சுனையர் அகரன் ஐயா ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து தீக்கை பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கலும் இடம்பெற்றிருந்தது.

(25-05-2024) – திருஞானசம்பந்த பெருமான் குருபூசை நிகழ்வு இடம்பெற்றது.

(02-06-2024) – திருமதி. இராஜேஸ்வரி அம்மா திருநாவுக்கரசு அவர்களின் திருவடிப்பேறு வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. அன்றைய தினம் **"ஊரும் உறவும் எனது வாழ்வும்"** நூல் வழங்கலும் இடம்பெற்றது.

(04-06-2024) – வைகாசித் திங்கள் தேய்பிறை கழுவாய் வழிபாடுகள் இடம்பெற்றன.

(10-06-2024) – தெய்வ சேக்கிழார் பெருமான் குருபூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

(19-06-2024) – தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் குருபூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

திருச்சிற்றம்பலம்

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்



சிவஞானச் செல்வர்.
மருத்துவர்
ஈசான பிரதாபன்
தேசிகர்

**சரபர் கதை முதலியன திருமாலைத் தாழ்த்துவதற்குச் சைவர் புனைந்து கொண்டதாகவே வைணவர் கூறுகினர். இது உண்மையாகுமா?**

(கடந்த திங்கள் தொடர்ச்சி)

இதில், உருத்திரர் சிவவடிவம் பெற்றுநிற்கும் புண்ணிய உயிரேயானாலும் ஏனைய உயிர்களுக்குச் சிவவடிவாய் விளங்குவதால், உருத்திரனின் பஞ்சகிருத்தியத்தை உயிர்கள் சிவபெருமானுக்கு மாற்றான ஒன்றாகக் கொள்ளும் இடர் இல்லை. ஆனால், பிரம்மா திருமால் செய்யும் பஞ்சகிருத்தியங்களால் உயிர்கள் அந்த உயிர்வர்க்கத் தெய்வங்களைக் கடவுளாகக் கொண்டு உழலும் நிலை உருவாகும் வாய்ப்புண்டு. பிரம்மனுக்கும் திருமாலுக்குமே இவ்வாறு மயக்கம் உண்டாகியதன் விளைவே சிவராத்திரியும் திருக்கார்த்திகையுமாகும். எனவே, ஏனை உயிர்கள் உழல்வர் என்பதும் தெளிவு. அங்ஙனம் உயிர்வர்க்கத் திருமாலை எண்ணிப் பரம்பொருளென்று கொண்டு உழல்வோரே வைணவர். அதுபோல், உயிர்வர்க்கப் பிரம்மனும் உயிர்வர்க்கத் திருமாலும் பஞ்சகிருத்தியங்களும் செய்வதைக் கண்டு (அதில் முத்தொழில்களை மட்டுமே உணர்ந்து), எல்லாம் பிரம்மம் என்று மயங்கி உழல்வோரே சுமார்த்தமதத்தார். ஆக, பக்குவ உயிர்கள் அங்ஙனம் உழலக்கூடாதென்பதற்கு சிவபெருமான் உயிர்வர்க்கத் திருமால் முதலியோர் ஏகதேச அறிவும் தொழிலும் (வரையறுக்கப்பட்ட பஞ்சகிருத்தியம்) உடையோரேயென்றும், தமது அதிட்டித்தலில் உள்ளோரேயென்றும் உணர்த்தவேண்டிய கடப்பாடு உடையவராவார். மேலும், உயிரின் சார்ந்ததன் வண்ணம் இயல்பு திருமாலுக்கு உண்டென்று உணர்த்தினாலேயே, அவதாரத் திருமால் உயிர்வர்க்கம் என்பதில் பக்குவ உயிர்களுக்குத் தெளிவு விளங்கும். எங்ஙனம் இராமாயணம் மகாபாரதத்தில் இராமனும் கண்ணனும் அழுந்தனர் வெந்தனர் நொந்தனர் வருந்தினர் இறந்தனர் என்னும் செய்திகள் உண்டோ, அதுபோல் மச்ச அவதாரம்,கூர்வ அவதாரம்,நரசிம்ம அவதாரம்,வாமன அவதாரம்,பரசுராமர் அவதாரம் என்பவற்றிலும் சார்ந்ததன் வண்ண இயல்புடனேயே திருமால் விளங்கினார் என்பதனை உணர்த்துதல் கடன். எனவே, நரசிம்மர் இரணியனினை வதைத்தபோது, தாமே வல்லவர் என்னும் சார்ந்ததன் வண்ணமாய் ஆணவம் கொண்டார் என்பது திருமாலின் உயிர்வர்க்க நிலையை உணர்த்தும்பொருட்டேயொழிய, திருமாலினை இகழவல்ல! திருமால் நரசிம்மராய் நின்றபோது ஆணவம் கொண்டார் என்பது இகழ்வதென்றால், இராமர் சீதையைப் பிரிந்து அழுது புரண்டார் என்று வால்மிகி எழுதியதும் திருமாலுக்கு இழுக்கென்றேயாகும். ஆக, இரண்டுமே திருமாலின் உயிர்வர்க்க இயல்பென்று கொள்ளும்போது எந்த இழுக்கும் எவருக்கும் இல்லையாம். சரபர் நரசிம்மரை வதைத்து அடக்கினார் என்பதனூடாக, திருமாலின் தொழில்கள் யாவும் பிரதிட்டைக்கலைக்கு மட்டுமே உரித்தானதும் சிவபெருமானின் அதிட்டித்தலில் நிகழ்வதும் என்பதை உணர்த்தும் வகையினதாகும். எனவே, அதுவும் உயிர்வர்க்கத் திருமாலின் தொழில்களைக் கண்டு முழுமுதற் கடவுளென்றோ் சகுணப்பிரம்மத்தின் மங்கலவடிவமென்றோ, பக்குவ உயிர்கள் உழலாது உயர்வதற்கேயாம்.

காவல்துறை அதிகாரி, இராணுவ அதிகாரி, அரச திணைக்கள அதிகாரி, அதிபர், மருத்துவர், சட்டத்தரணி, நீதிபதி, அரசியல் தலைவர், அமைச்சர், பிரதமர், சனாதிபதி என்றெல்லாம் வலிமையான இடங்களில் இருப்போர் தாம் செய்த புண்ணியவிசேடத்தால் சிவபெருமான் அருளிய பணிகளேயென்று தெளிந்து மக்கள் சேவையே மகேசன் சேவையென்று சிவசிந்தையோடு வாழ்ந்தலே கடன். அதனைவிடுத்து, அதிகாரப் பதவிகளில் இருப்போர் தமக்குக் கீழ் உள்ளோரினை தம் அதிகார மமதையினால் வாட்டினால் அவர்களைச் சிவபெருமானின் மறக்கருணை வாட்டும். இவ்வுண்மையும் இச்சரபர் வடிவத்தால் உலகுக்குச் சிவபெருமான் உணர்த்தியருளியுள்ளார்.

**எளியரை வலியர் வாட்டின் வலியரை இருநீர் வைப்பின்**
**அளியறத் தெய்வம் வாட்டும் எனுமுரைக் கமைய அன்றே**
**தெளியுமா வலியைச் செற்றோற் செகுத்துரிக் கவயம் போர்த்த**
**வளியுளர் கச்சி காவல் வயிரவர்க் கன்பு செய்வாம்.** - காஞ்சிப் புராணம்

பொருள் - எளியரை வலியர் வருத்தின் அளியையுடைய அறக்கடவுள் அவ்வலியரை வருத்தும் என்பதற்குச் சான்றாக, மாவலியை அழித்த நெடியோனை அழித்து அவரது தோலைக் கவசமாகப் போர்த்த, காற்று மிக்குலவும் காஞ்சியைக் காவல் கொண்ட வயிரவர்க்கு அன்பு வைப்பாம்.

வாமன அவதாரம் கொண்டு மாவலியை பாதாள உலகிற்கு அனுப்பியபிறகு மூவுலகும் அளந்ததால் ஏற்பட்ட செருக்கில் நெடியோனாக நின்ற திருமால், செருக்குக் கொண்டு தாமே வல்லவர் என்று எளியோரை வாட்டலாயினார். அப்போது, சிவபெருமான் வயிரவக்கடவுளை அனுப்பி, வாமனனாய் வந்து நெடியோனாய் நின்ற திருமாலைத் தண்டித்து அவருடைய தோலினை உரித்துப் போர்வையாக்கி, திருமாலுக்கு அவர் சார்ந்ததன் வண்ணமாகும் ஒரு உயிர்வர்க்கத்தினர் என்று உணருமாறு செய்தார். இச்செய்தியைக் காஞ்சிப்புராணம் கூறும்போது, வலியோர் எளியாரைக் கொடுமைப் படுத்தினால், இறைவன் அந்த வலியோரைத் தண்டித்து எளியோரைக் காத்தருளுவான் என்பதாகும். இச்செய்தி சரபராகத் தோன்றிச் சிவபெருமான் நரசிம்மரை தண்டித்து அருளியதற்கும் பொருந்தும்.

(முற்றும்)

எல்லாம் திருவருட் சம்மதம்

தென்னாடு
செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

**சிவத்திரு. சிவ. செந்தமிழாதன்,**
**ஆசிரியர் – தென்னாடு,**
**செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.**
+94 (77) 575 2551 / aathan@thennadu.org



# தமிழ்முறையில் மணம் புரிவோம்!

தெய்வத்தன்மை பொருந்திய இணைவே **'திருமணம்'** எனப்படுகிறது. தமிழர்களின் வாழ்வியல் சடங்குகள் பல இருந்தாலும் அவற்றில் முக்கியமானது திருமணம். ஏனெனில் அது ஒரு புதிய குடும்பத்தின் ஆரம்ப நிகழ்வு. கால காலமாகத் தமிழர்கள் பெரும் பொருட்செலவில் திருமணங்களை மிக மகிழ்வாக நடாத்தி வருகின்றனர். ஆயினும் அவற்றின் பயனை முழுமையாகப் பெறத்தக்க வகையில் பொருள் விளங்க சடங்குகளை நடாத்துகின்றார்களா? என்றால் அது கேள்விக்குறியே!

வடமொழி மந்திரங்களும், தமிழர் மரபுக்கும் பண்பாட்டுக்கும் ஒவ்வாத சடங்குகளுமாகவே பன்னெடுங்காலமாக நாம் திருமணங்களை நடாத்தி வருகின்றோம். இந்த ஒவ்வா முறைமையினை மாற்றி மீண்டும் எம் வழியில், திருநெறிய தமிழ் வழியில் திருமணங்களை செய்விக்க நாம் முன் வர வேண்டும்.

முதல் வகுப்பிற்கு கற்க செல்லும் ஒரு பிள்ளைக்கு அதன் தாய்மொழியிலேயே கல்வி கற்பிக்க வேண்டியது எவ்வளவு அவசியமும் பொருத்தமுமானதோ அவ்வாறே, குடும்ப வாழ்வின் முதல் அத்தியாயத்தை நோக்கி செல்லும் இணைவருக்கு அவர் அவர் தாய்மொழியில் சடங்குகளை செய்வித்தல் அவசியமானதாகும்.

திருமண நெறியாளர் சொல்லும் தமிழ் மறைகளாகிய தேவாரங்கள் நேர் அதிர்வுகளாக ஓங்கி ஒலித்து அவை வாழ்வை செம்மைப்படுத்தும். இதனாலே தான் திருஞானசம்பந்தர் **"மருந்து வேண்டில் இவை மந்திரங்கள் இவை"** என்று எமக்கு சான்று தருகின்றார். சிவ வாக்காக என்றும் ஒலிப்பவை தேவாரங்களே என்பதை நாம் உணர்ந்து அவற்றை அடிப்படையாக வைத்து பிற சடங்குகளையும் எம் பண்பாட்டுக்கு ஏற்ப இணைத்து திருமணங்களை செய்ய முன் வர வேண்டும்.

நீண்ட கால பழக்கம் ஒன்றை திடீரென மாற்றுவது சிறிது கடினம் தான். ஆனால் மாற்றம் முதலில் சவால்களோடு ஏற்படுத்தப்பட்டால் தான் அது வழமை பெற்று நிலை பெறும். பலரும் தமிழ் முறைத்திருமணங்களை தவிர்ப்பதற்கு இருக்கும் ஒரே ஒரு காரணம் வழமையை மாற்றக்கூடாது என்பது தான். ஆனால் அவர்கள் எம் பழைமை எதுவென்று உணர்வார்களேயாயின் இந்த மாற்றம் உடனே நிகழும்.

திருமண வயதை அடைந்த ஒவ்வொரு இளையவரும் தமக்கு வாய்க்கப்போகும் துணையின் விடயத்தில் எவ்வளவு கனவுகளோடும் எதிர்பார்ப்புக்களோடும் அவற்றில் உறுதியோடும் இருக்கிறார்களோ அவ்வாறே தாய்தமிழில் திருமணம் செய்வோம் எனும் உறுதியையும் எடுத்துக்கொள்ள வேண்டும். கவலை என்னவெனில் பொதுவெளியில் தாய்மொழி என்றும் எம் மரபு என்றும் பேசும் பல இளையவர்களும் பெரியவர்களும் திருமண விடயத்தில் மட்டும் தம் குரல்வளைகளுக்குப் பூட்டுப்போட்டுவிட்டு சத்தமில்லாமல் வடமொழியில் திருமணம் செய்து கொள்கின்றனர் அல்லது செய்து வைக்கின்றனர். இந்த நிலை மாற வேண்டும். தமிழ் எம் வாழ்வியல் சடங்குகளை ஆழ வேண்டும்.

ஆரம்பத்தில் தமிழர்களின் திருமணங்கள் பல்வேறு வடிவங்களில் அவரவர் குல வழக்கப்படியே நிகழ்ந்தேறின. ஏறு தழுவி மணம் முடித்தல், கல்லைத்தூக்கி மணம் முடித்தல், சோறு கொடுத்து மணம் முடித்தல், களவு மணம் எனப்பல வகை இருந்தாலும் பண்பட்ட வடிவமாக சிலப்பதிகாரம் – மணிமேகலை கால கட்டத்தில் பழந்தமிழர் திருமண முறைகள் மாற்றம் கண்டன.

வைதீக முறைகளை பின்பற்றிய காலத்தில் குலப் பாகுபாடுகள் தமிழர் திருமண முறையில் கலந்தன. நாயன்மார், ஆழ்வார் பாடல்கள், பெரியபுராணம், கம்பராமாயணம், சூளாமணி உள்பட பல இலக்கியங்களில் ஆரிய கலப்புடன் சாதி, குலம், கோத்திரம், பார்ப்பனீய சடங்குகளுடன் திருமண முறை மாறியது. கால வகையினாலே நாமும் மாற்றங்களை ஏற்றுக்கொண்டாலும், மொழியை மாற்றுவது என்பது கண்டிக்கத்தக்கது!

எனவே தான் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் அண்மைய ஆண்டுகளாக வடமொழிக்கலப்பின்றி தனித்தமிழில் சடங்குகளுடன் கூடிய பண்பட்ட தனித்தமிழ் திருமணங்களை நடாத்தி வைக்கின்றது. ஈழ மண்ணில் தாய்மொழியில், **"புரிந்து கேட்கப்படும் புண்ணியங்கள்"** என திருஞானசம்பந்தர் ஆணையிட்டு உரைத்த தமிழ்வேதம் திசையெல்லாம் நிறைய திருமணம் செய்து புதிய வாழ்வைத் தொடங்க விரும்புபவர்கள் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தைத் தொடர்பு கொண்டு பயனடைந்து கொள்க! மாற்றத்தின் முதல் அடி எம்மிடம் இருந்தே ஆரம்பிக்கட்டும்!

**கருந்தடந் தேன்மல்கு**
**கமுமல வளநகர்ப்**
**பெருந்தடங் கொங்கையோ**
**டிருந்தளம் பிரான்றனை**
**அருந்தமிழ் ஞானசம்**
**பந்தன் செந்தமிழ்**
**விரும்புவா ரவர்கள்போய்**
**விண்ணுல காள்வரே.**

**திருச்சிற்றம்பலம்**

தென்னாடு
செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

**சிவத்திரு.யாழவன் சிவவேதன்,**
**அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,**
**செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.**
+94 (70) 770 1111, sivavethan@thennadu.org



# ஈழத்து முருக மரபை தேட வாருங்கள்

இலங்கையின் கோயில்களை ஆய்வு செய்கின்ற போது பல வகைகளின் கீழ் அவற்றை வகைப்படுத்திக் கொள்ள முடியும். தமிழ்நாட்டு மரபை பின்னணியாகக் கொண்ட சைவக் கோயில்கள், சிங்கள மரபோடு இணைந்து வளர்க்கப்பட்டிருக்கின்ற சைவக் கோயில்கள், தனித்த ஈழத் தமிழ் மரபைக் கொண்ட கோயில்கள் என அவற்றைப் பிரதானமாக மூன்று வகைகளின் கீழ் அடையாளம் காண முடியும். ஈழத்துச் சைவ திருக்கோயில் வரிசையிலே தனித்துவமான வரலாற்று பின்னணியில் பாரம்பரியத்தையும் கொண்ட கோயிலாக முருகன் கோயில்களே நிற்கின்றன என்பதில் எந்தவித மிகைப்படுத்தலும் இல்லை. அமைவிடம் சார்ந்து ஈழத்தினுடைய முருகன் கோயில்களை பிரதானமாக மூன்று வகைகளின் கீழே நோக்க முடியும். வடபகுதி சார்ந்த முருகன் கோயில்கள், கிழக்கிலங்கை முருகன் கோயில்கள், ஏனைய பகுதிகளைச் சார்ந்த முருகன் கோயில்கள்.

முருகன் கோயில்கள் சார்ந்த ஆராய்ச்சி இலங்கையில் போதிய அளவு காணப்படவில்லை என்பதுதான் கவலைக்கிடமான விடயமாக இருக்கின்றது. முருக வழிபாட்டு மரபு இலங்கையில் எவ்வளவு தீவிரமாக இருந்துள்ளது என்பதை அறிவதற்கு அது இலங்கையின் பௌத்தத்தை பாதித்த காரணியை அறிந்தாலே போதுமானது. இலங்கைப் பௌத்த மரபின் அடிப்படையில் நான்கு திசைகளுக்கும் நான்கு கடவுளர்களை பௌத்தம் நியமித்துள்ளது. அந்த வகையிலே முருகன், இந்திரன், திருமால், கண்ணகி முதலிய கடவுளர்களை பௌத்தம் எல்லைக் கடவுளர்களாக நியமித்து உள்ளது. இந்த மரபு தமிழ் நிலத்தின் நிலத்தெய்வ மரபுகளோடு பொருந்தியே காணப்படுகின்றது. முல்லை நிலத்தின் திருமாலும், மருத நிலத்தின் இந்திரனும், குறிஞ்சி நிலத்து முருகனும் அப்படியே திசை கடவுளர்களாக மாற்றப்பட்டிருக்க, மான் ஏறிய கொற்றவையை மாத்திரம் சிலம்பேந்திய கண்ணகி பதிலீடு செய்து கொள்ளுகின்றார். நெய்தல் நிலத்துத் தெய்வமாகிய வருணன் மாத்திரமே இந்த வகைப்பாடுகளில் இருந்து விலக்கப்பட்ட தெய்வமாகக் காணப்படுகின்றார். ஆயினும் கடல் சூழ்ந்த இலங்கையில் கடற்கடவுள் திசைக்கடவுளாக காணப் படாமை தொடர்பில் ஆராய்ச்சி செய்ய வேண்டியது அறிஞர்களின் கடமை.

கிழக்கிலங்கையின் முருகன் கோயில்களில் சிறப்புப் பெற்ற சில கோயில்களை திருப்படைக் கோயில்கள் என்று அவ்வட்டார இலக்கியங்கள் கூறுகின்றன. குறிப்பிட்ட சில கிழக்கிலங்கை முருகன் கோயில்களை திருப்படைக் கோயில்கள் என்றும் சில முருகன் மற்றும் சிவன் கோயில்களை இணைத்து தேசத்துக் கோயில்கள் என்றும் கூறும் மரபு கிழக்கிலங்கை இலக்கியங்களிலே காணப்படுகின்றது. அதற்கு அமைவாக பல்வேறு பிரபந்தங்கள், பல்வேறு செய்யுட்கள், பாடல்கள், நாட்டார் பாடல்கள், கிராமியக் கதைகள் இக்கோயில்கள் மீது பின்னப்பட்டு காணப்படுகின்றன.

அதை வேளையில் வட இலங்கையிலும் முருக வழிபாடு தனித்துவம் வாய்ந்த வழிபாடாகவே காணப்படுகின்றது. கிழக்கிலங்கையைக் காட்டிலும் வட இலங்கைக் கோயில்கள் ஆகம மரபை அதிகம் ஈர்த்துக் கொண்ட கோயில்களாக காணப்படுகின்றன. எனினும் சில வட இலங்கை கோயில்கள் அதற்கு விதிவிலக்காகவே காணப்படுகின்றன. செல்வச் சந்நிதிக் கந்தசாமி கோயில் ஆகம வழிபாட்டின் மாற்று மரபாகவே காணப்பட, நல்லூர் கந்தசாமி கோயிலிலும் தனக்கென்று தனியான வழிபாட்டு மரபை கொண்டு இயங்குகின்றது. ஆயினும் மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் வரலாற்று அடிப்படையில் ஆகமம் சார்ந்த கோயிலாகவே காணப்படுகிறது. உலகப் பெருமஞ்சத்தை கொண்டிருக்கும் இணுவில் கந்தசாமி கோயிலும் குறிப்பிடத் தக்க கோயிலாகும்.

கிழக்கிலங்கையின் திருப்படைக் கோயில்களும், வட இலங்கையின் முருகன் கோயில்களும் தமக்கு இடையில் பல தொடர்புகளையும் சில வேறுபாடுகளையும் கொண்டுள்ளன. இவை தொடர்பாக இலக்கிய அடிப்படையாகவும், வரலாற்று அடிப்படையாகவும், சமய வழிபாட்டு அடிப்படையாகவும் ஆராய வேண்டியது அறிஞர்களுடைய கடன். எனவே சிவ பூமியில் சிவபெருமானை மாத்திரம் தேடாது முருகப்பெருமானையும் சேர்ந்தே தேடுவோம். அம் முருகப்பெருமானே சிவபெருமானை காண்பித்து விடுவான்.

**திருச்சிற்றம்பலம்**

# செல்வச்சந்நிதியுறை அருள்மிகு சந்நிதியானும் சித்தர்களும்





கலாநிதி சு.குணேஸ்வரன்
ஆசிரியர் -
யா / சிதம்பரக் கல்லூரி,
வல்வெட்டித்துறை

### சந்நிதியின் அறிமுகம்

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி திருக்கோயில் தொன்மையும் அருட்பெருமையும் வாய்ந்தது. இக்கோயில் வரலாற்றுடன் சித்தர்களும் இணைத்துப் பேசப்படுகின்றனர். செல்வச்சந்நிதிக்கு அருகில் தெற்குப் புறமாக கரும்பாவளியில் அமைந்துள்ள சித்தர்களின் சமாதிகள் இவற்றை உறுதி செய்கின்றன. செல்வச்சந்நிதி கோயிலின் தொன்மை, அதன் வழிபாட்டு முறை, அங்கு வாழ்ந்த சித்தர்கள், அவர்களின் சமாதிகள் ஆகியவற்றை வெளிப்படுத்துவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

ஆரம்பகாலத்தில் கோயிலின் அருகே ஓடிய ஆறு 'வல்லியாறு' என அழைக்கப்பட்டது. இது சோழர் வரலாற்றுக்குப் பின்னரே 'தொண்டைமானாறு' என்ற பெயர் கொண்டு அழைக்கப்பட்டது. 'படைக்கோயில்' ஆகிய கதிர்காமத்துடன் தொடர்புபடுத்தி சந்நிதியும் நோக்கப்படுவதன் ஊடாக வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொடக்கம் முருக வழிபாடு இங்கு நிலவி வந்துள்ளமையை இப்பிர



சிவலிங்க வடிவம் உடைய சிறிய சமாதி

தேசத்தின் இயற்கைச் சூழமைவும் வெளிப்படுத்துகின்றது.

ஈழத்தில் உள்ள முருகன் கோயில்களில் ஆகமமரபு சார்ந்தும் ஆகமமரபு சாராமலும் இரண்டு வகையான வழிபாட்டு மரபுகள் நிலவி வந்துள்ளன. கதிர்காமம், செல்வச்சந்நிதி, மண்டூர் கந்தசாமி ஆகியவை ஆகம மரபு சாராத பூசை முறைகளைக் கொண்டமைந்தவை. செல்வச்சந்நிதியில் அந்தணர் மரபல்லாதவர்கள் பூசை செய்கின்றனர். கதிர்காமத்தில் சிங்கள வேடுவர் பரம்பரையினர் பூசை செய்கின்றனர். இவர்கள் 'கப்புறாளைமார்' என அழைக்கப்படுவர். "மட்டக்களப்பு மாவட்டத்தில் புகழ்பெற்று விளங்கும் இன்னுமொரு முருகன் கோயில் சித்தாண்டிக் கந்தசுவாமி கோயிலாகும். இதுவும் ஒரு திருப்படைக் கோயிலாகும். இக்கோயிலை ஆரம்பத்தில் வேடுவரும், பின்னர் சித்தர் எனப்படும் ஆண்டியும் வழிபாடு செய்து வந்தமையினால் சித்தாண்டி எனப் பெயர் பெற்றதாக ஒரு நம்பிக்கை நிலவுகின்றது."

இவ்வகையில் இம்மூன்று முருகன் கோயில்களிலும் ஆகமம் சாராத வழிபாட்டு மரபு நிலவி வருவதோடு அவை அந்தணர் அல்லாதவர்களால் பூசை செய்யப்பட்டு வருவதும் குறிப்பிடற்பாலது.

### சந்நிதியின் வழிபாட்டு முறை

செல்வச்சந்நிதி கோயில் வரலாறு நம்பிக்கைகளுடனும் புராணங்களுடனும் தொடர்புபட்ட வகையிலேயே பின்னிப் பிணைந்துள்ளது. முருகன், சூரனுடன் போர்புரிவதற்கு முன்னர் வீரபாகுதேவரை சூரனிடம் தூதாக அனுப்பினான். அதன்போது வீரபாகுதேவர் கல்லோடையில் தரித்து வழிபட்ட இடமே செல்வச்சந்நிதி எனக் கூறப்படுகிறது. இதனால் சந்நிதி முருகன் 'கல்லோடைக் கந்தன்' எனவும் அழைக்கப்படுகின்றான். ஆற்றங்கரையில் அமைந்த காரணத்தினால் 'ஆற்றங்கரையான்' எனவும் விளிக்கப்படுகின்றான். கோயிலின் உள்ளே உள்ள பிள்ளையார் மாணிக்கப் பிள்ளையார் என அழைக்கப்படுவார். அதன் முன் உள்ள தீர்த்தக்குளம் மாணிக்க கங்கை எனப்படுகிறது.

மற்றொரு நம்பிக்கை சிகண்டி - ஐராவசு கதையூடாகச் சொல்லப்படுகிறது. சிகண்டி முனிவரால் சாபம் நீங்கப்பெற்ற ஐராவசு என்ற கந்தர்வன் வணங்கித் தியானம் செய்து முத்தி அடைந்த இடமே சந்நிதியாகும். அதன் அடையாளமாகவே இன்றும் சந்நிதியின் கோயில்மரமான பூவரசு வணக்கத்திற்குரியதாக அமைந்துள்ளது.

16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்ட இக்கோயில் பின்னர் மருதர் கதிர்காமரால் புனரமைக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டது. இது பற்றி குல சபாநாதன் தரும் கூற்றை நோக்கலாம்.

"அநாதி மல முத்தனாகிய முருகப் பெருமான் சந்நிதியில் எப்பொழுது கோயில் கொண்டெழுந்தருளினார் என்ற சரித்திர ஆராய்ச்சியில் சிற்றறிவும் சிறுதொழிலுமுடைய மக்கள் ஈடுபட்டு உண்மை காண்பதரிது. பண்டைக்காலத்தில் ஈழத்தில் சைவ சமயம் சிறப்புற்று ஓங்கியபொழுது, செல்வச்சந்நிதி முருகன் கோயில் பல வீதிகளுடைய சிறந்த ஆலயமாக விளங்கியது. போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் (டச்சுக்காரர்) இலங்கையில் ஆட்சி புரிந்த காலத்தில் தத்தம் சமயக் கொள்கையைப் பரப்பியதுமன்றி சைவக்கோயில்களைத் தகர்த்து அவை இருந்த இடமும் தெரியாமல் தரைமட்டமாக்கிவிடும் கைங்கரியத்திலும் ஈடுபட்டிருந்தனர். கதிர்காமத்தை இடிக்கச் சென்ற ஒல்லாந்தர் வழி தடுமாறி மயங்கிக் கடைசியில் அதனை அடைய முடியாது திரும்பி வந்துவிட்டதாக ஒல்லாந்தரே எழுதிய சரித்திரத்தில் குறிப்பிட்டிருக்கின்றனர். அதுபோலவே சந்நிதியிலும் ஒரு திருவிளையாடல் நடைபெற்றது. செல்வச்சந்நிதி முருகன் கோயிலை இடிக்கச்சென்ற ஒல்லாந்தர் அதனை முற்றாக இடிக்க முடியாது திரும்பிவிட்டனர்."

வேல் வழிபாடு இடம் பெறும் சந்நிதியில் தீப வழிபாடும் முதன்மை பெற்றிருக்கின்றது. நெய்த்தீபம், அடுக்குத்தீபம், புருஷா மிருக தீபம், கற்பூர தீபம், ஐந்தீபம் (பஞ்சாரத்தி) ஆகியவை பூசையின் போது காட்டப்படுகின்றன. இவற்றில் கற்பூரதீப வழிபாடு மிக விசேடமானதாகும். செல்வச்சந்நிதியில் 65 ஆலம் இலைகளில் அமுது படைக்கும் வழக்கம் உள்ளது. அந்த அமுது கிடைத்தால் அது 'சந்நிதி மருந்து' என அழைக்கப்படுகிறது. (சந்நிதி மருந்து என்பது ஆலம் இலையில் படைக்கப்பட்ட பச்சரிசி அமுதும் பயிற்றங்கறியும் ஆகும்)

'சந்நிதி மருந்து' என்பதுபோல சந்நிதி தொடர்பான வேறு சில சொல்லாடல்களும் கவனத்திற்குரியன. அன்னதானக் கந்தன், மாவிளக்கு, ஆண்டியப்பர் பூசை, வாய்கட்டிப் பூசை செய்தல், வள்ளிக் கிழங்கு, தலவிருட்சம் பூவரசு, வேல் அனுப்புதல், பயணப்பிட்டு (உழுத்தப்பிட்டு), நெய் விளக்கு, தேனும் தினைமாவும், பயற்றம் துவையல், இளநீர் பால் றொட்டி முதலானவை முக்கியமானவை. இச்சொல்லாடல்களின் பின்னால் வழிபாடு, நேர்த்திக்கடன், நம்பிக்கை சார்ந்த விரிவான அர்த்தப்பாடுகள் உள்ளன.



சமாதிகள் அமைந்திருக்கும் சூழல்

'மதசனநாயக நிலை' சந்நிதியின் பிரதான மத அனுபவ அம்சம் என்று செல்வச்சந்நிதி வழிபாட்டில் சமூகம் தொடர்பாக பேராசிரியர் கா. சிவத்தம்பி குறிப்பிடுகிறார்.

"இக்கோயிலின் மிகப்பெரிய சிறப்பு, இங்குவரும் பத்தர்கள் முருகனுடன் நடத்திக்கொள்ளும் சொல்லாடலாகும். அவனுடன் பேசுவது போன்ற ஒரு பாவனை. அவனும் தங்களுக்குச் சொல்கின்றான் என்ற நம்பிக்கை, ஆன்மார்த்தமான சொல்லாடலுக்கு இங்குள்ள பூசை மரபுகள் இடைநிற்பதில்லை. கோயிலடியில் நின்றாலே அந்த இணைவு ஏற்படுகின்றது. இந்த மரபு சந்நிதியில் பேணப்படுவது முக்கியம். அதனை வளர்ப்பதற்கு எவ்வெவற்றைச் செய்யலாம் என்று பார்ப்பதிலும் பார்க்க, அந்த மரபை ஊறு செய்வதற்கு எவ்வாறு இடம் கொடாது விடலாம் என்று பார்ப்பது முக்கியம். அதுவே தலையானதாகும். சந்நிதியின் பிரதான மத அனுபவ அமிசம் அதன் 'மதசனநாயக' நிலையாகும். இங்கு ஒதுக்கப்பாடுகள் இல்லை. உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வேறுபாடின்றி சகலரும், சந்நிதி முருகனைத் தங்கள் நிலைநிற்கும் தெய்வமாகவே கருதி வழிபடுகின்றனர். அதேவேளையில் இத்தலம் ஞானிகள் சித்தர்கள் வாழ்கின்ற ஒரு மையமாகவும் உள்ளது. நமது மத காலத்தில் இரண்டு அலைவரிசைகள் இங்கு அற்புதமாக இணைந்துள்ளன."

(தொடரும்...)

திருச்சிற்றம்பலம்

# சைவத்தை அறிமின் சிவத்தை அறிமின்

**தசகாரியம் என்பதில் வரும் பத்துப் படி நிலைகளையும் விளக்குக?**

நாம் ஒரு பொருளைப் பார்க்கும் பொழுது, அதனை முதலில் பொது வகையால் காண்கின்றோம். பின்னர் அது ஏதாக இருக்கும் என்ற ஐயத்தோடு காண்கிறோம். அதன்பின் அதனைப் பற்றிய தெளிவு உண்டாகிறது. இந்த மூன்று நிலைகளும், ஒன்றன்பின் ஒன்றாக கணப் பொழுதுக்குள் நடக்கின்றன. இவ்வாறு பொது வகையில் காண்பது ரூபம், ஐயத்தில் காண்பது தரிசனம், தெளிவு உண்டாவது சுத்தி என்பதை மனதில் கொண்டால் இவற்றை விளங்குவது எளிதாக இருக்கும்.

முப்பத்தாறு தத்துவங்களையும் அவற்றின் தன்மையையும் படித்து கேட்டு பொதுவகையாக அறிவது தத்துவரூபம். இங்ஙனம் அறிந்தவை சரியானவையா தவறானவையா என்று எண்ணிப் பார்த்தல் தத்துவ தரிசனம். இதில் சரியா தவறா, தத்துவங்களே நாமா என்பனபோன்ற ஐயங்கள் எழும். இதன்பின் படித்துக் கேட்டு அறிந்த தத்துவங்கள் அறிவற்ற சடப்பொருள்கள், நாம் அவையினும் வேறானவர் என்ற தெளிவு பிறக்கும். இதனால் தத்துவப் பொருட்களை சார்ந்திருக்கும் நிலை நீங்கும். இது தத்துவசுத்தி.

மேற்காட்டியவாறு உயிர் வேறு, தத்துவங்கள் வேறு எனவும், உயிரின் இயல்பு என்ன என்பதையும் நூல்களின் மூலமும் குரு மூலமும் அறிந்து கொள்ளுதல் ஆன்ம ரூபம். இவற்றைச் சிந்தித்து ஆராய்தல் ஆன்ம தரிசனம். இதில் உயிர் அறிவுப்பொருள் என்றாலும் இறைவன் அறிவித்தால் மட்டும் அறியும் பொருள் என்பது விளங்கும். ஆயினும் இது தெளிவற்று ஐயத்துக் கிடமானதாக இருக்கும். இந்த ஐயநிலை நீங்கி இறையருள் வழியில் தனது சிந்தனை செயல் நடைபெறுகின்றது என்ற தெளிவுண்டாகி, நான் எனது என்ற கர்வம் நீங்கிய நிலை ஆன்மசுத்தி.

சிவரூபம் என்பது சிவத்தின் இயல்பை நூல்கள் மூலமும் குரு மூலமும் அறிந்திருப்பதாகும். நான், எனது என்ற கர்வம் அகன்று, எல்லாம் அவன் செயல், எங்கும் அவனே உள்ளான், என்று உணர்ந்திருக்கும் நிலை சிவ தரிசனம். இந்த நிலையிலும் பழைய பழக்கத்தால் (மல வாசனையால்) நான் செய்தேன், என்னால் ஆனது போன்ற தற்போதம் எழலாம். அதனைக் கொள்ளாமல் சிவனருளில் ஒன்றியிருத்தல் சிவயோகம். (யோகம் - ஒன்றியிருத்தல்). இந்த நிலை வந்தபின் உயிர் தன் செயலற்றுச் சிவானந்தத்தில் அழுந்தி இன்பம் அனுபவிக்கும் நிலை உண்டாகும். இது சிவபோகம்.



**ஐயக்காட்சி, தெளிவுக் காட்சி ஆகியவற்றை விளக்குக.**

நாம் ஒன்றைக் காணும் போது, அதனை எமது பொறி புலன்களின் மூலம் காண்கிறோம். அப்பொழுது அதன் பொருள், குணம் ஆகியவை உடனே தெரிவதில்லை. இது பொதுக் காட்சி எனப்படும். வாயிற்காட்சி எனவும் கூறப்படும். இந்திரியங்கள் மூலம் அறிவதால் இந்திரியக் காட்சி எனவும் இதனைக் கூறுவர். தசகாரியத்தில் ரூபம் என்று முடியும் நிலைகள் இக்காட்சி சார்ந்தவையாகும். கண்ட பொருளை இதுவோ அதுவோ என்று துணிந்து சொல்ல முடியாதவாறு ஐயத்துடன் எமது அறிவு ஆராயும். இது ஐயக்காட்சி. தரிசனம் என்று தசகாரியத்தில் வரும் நிலைகள் இக்காட்சியாகும்.

தெளிந்து நிச்சயித்துக் காணல் தெளிவுக்காட்சி. தத்துவ சுத்தி, ஆன்மசுத்தி, சிவயோகம், சிவபோகம் ஆகிய நிலைகள் இந்தக் காட்சியைச் சார்ந்தவையாகும்.

**மேற்கூறப்பட்ட பத்து நிலைகளும் ஒன்றன்பின் ஒன்றாகத்தான் வருமா?**

இல்லை. ஒன்று நிகழும் போதே இன்னொன்றும் நிகழும். ஆன்ம ரூபத்தில் தத்துவரூபம், தத்துவதரிசனம் ஆகிய இரண்டும் நிகழும். இது போல பிற நிலைகள் சிலவற்றிலும் இத்தகைய நிகழ்வுகளைக் கூறலாம்.

**திருச்சிற்றம்பலம்**

**மூலம் - சைவ சித்தாந்த வினாவிடை (கலாநிதி க.கணேசலிங்கம்)**

# நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல்

**நாவலரின் ஆங்கிலக் கல்வி**

ஆசிரியர் ஒரே தடவை படிக்கும் பாடலைக் கேட்டுப் பொருளுணர்ந்து திருத்தம் கூறும் ஆற்றலுமிருக்குமாயின் அவர் அறிவை என்னென்று புகழ்வது? ஆசிரியர்களும் ஏனைய மாணவர்களும் தனி மதிப்புத் தாராதிருப்பரோ? இடைக்காலத்திலே ஏடாயிரங்கோடி எழுதாது தம் மனத்து எழுதிப் படித்த விரகராம் அந்தகக் கவி வீரராக முதலியாரும் இத்தகு கூர்த்த அறிவுடையாரே. ஆங்கில ஆட்சிக் காலமாகிய பத்தொன்பதாம் நூற்றாண்டிலே சென்னை உயர் நீதிமன்றத் தலைவராயிருந்து அழியாப் புகழ் எய்திய சர். முத்துச்சாமி ஐயர் என்பார் தாம் கல்வி பயிலும் இளமைக் காலத்தில் ஆசிரியர் கற்பிக்காத நூல்களையும் பாடங்களையும் தாமே கற்று நினைவாற்றலிற் சிறந்தவராய்த் திகழ்ந்தனர் என்பதும் அறிந்து உளங்கொளத் தக்கது. இதனால் பெறப்படுவதோர் உண்மை யாது? நூறாண்டுகட்கு ஒரு முறையேனும் வியத்தகு பேரறிஞர் தோன்றி வழிகாட்டுவர் என்பதன்றோ?

நாவலர் நுட்ப அறிவு கண்டு மகிழ்ந்தவர்களில் அவரது உறவினர் விசுவநாத முதலியார் என்பவரும் ஒருவர். யாழ்ப் பாணத்திலே நீதிபதியாக விளங்கிப் புகழ்கொண்டவர். அக்காலத்தில், தமிழறிந்தவர்களால் கோயில்களில் புராணங் கள் படிக்கப்பெறுவதுண்டு. கேட்டால் புண்ணியமுண்டு என்ற நோக்கத்தோடு வருபவரே பலராவர். புலமையைப் பற்றியோ கருத்துக்களைப்பற்றியோ கூர்ந்து நோக்குவார் மிக அரியர். அவ்வாறு புராணங்கள் நடைபெறுங்காலத்தில் நீதிபதியவர்கள் நாவலரையும் அழைத்துச் செல்வது வழக்கம். செல்லுகின்ற நாட்களில் கந்த புராணம், திருவிளையாடற் புராணம், திருவாதவூர்ப் புராணம், பெரிய புராணம் முதலியவற்றுள் ஒன்றைப் படித்து விளக்குவார்கள். அவர்கள் படிக்கின்ற போதும் விளக்கம்கூறும்போதும் இரு செவியும் பயன்படுமாறு உற்றுக் கேட்பர். கேட்ட பின்னர் பாடலிற் காணும் பிழைகள், கருத்து மாறுபாடுகள் முதலியவற்றை எடுத்துக் காட்டி யாவரும் ஒப்புமாறு செய்வர். பன்னீராண்டும் நிரம்பப்பெறாத நாவலர் ஆயிரக் கணக்கான கதைகளையும், பாடல்களையும், சித்தாந்த உண்மைகளையும் கொண்ட நூல்களைக் கேட்ட மாத்திரத்தே பிழை கண்டு மெய்பித்துக் காட்டும் பெற்றி கண்டு வியக்காதோர் யாரே? அவரை அற்புதப் பிறவி என்று யாவரும் வணங்க முற்பட்டமைக்கு இதனினும் சான்று வேண்டுங்கொல்?

இவ்வற்புத நிகழ்ச்சியைத் தமையன் முதலாயினோர் கேட்டு உவகையுற்றனர். “இவருடன் பிறந்தற்கு என்ன மாதவம் செய்தோம்!” என எண்ணி எண்ணி உருகினர் தமிழைக் கற்கச் செய்ததோடு நில்லாமல் நாவலரை ஆங்கிலமும் கற்கச் செய்யும் விருப்புக் கொண்டனர். இந்த உலகிலே திறமையுள்ளவர் ஆதரிப்பாரில்லாமல் எத்தனையோ பேர் மண்ணோடு மண்ணாய்ப் புதையுண்டனர். தங்கள் திறமையை உலகிற்கு உதவும் வாய்ப்பில்லாது உயிர் துறந்து கல்லறையிலே அடங்கியோர் எத்தனை பேர்? அந்த நிலையை நம் நாவலருக்கு அளிக்காத தமிழினத்திற்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்! நாவலர் திறமையை அறிந்த அவர் உடன் பிறந்தோர் அவர் திறனை வளர்க்கப் பேருதவி புரிந்தனர். அந்நாளில் பார்சிவல் துரை நடத்திவந்த பள்ளியில் ஆங்கிலம் கற்க உய்த்தனர். நாவலர் கருத்தூன்றிக் கற்று மேல் வகுப்பை அடைந்தார். இவர் திறமையைக் கண்ட துரை மகனார் மிகவும் பாராட்டினார். இவருக்குத் தமிழ்ப் புலமை மிக்கிருப்பதை அறிந்து தாமும் பயன்படுத்திக் கொள்ள நினைத்தார். ஆகவே பள்ளியில் மாணவராக இருந்த நாவலரைக் கீழ் வகுப்புகளுக்கு ஆங்கிலமும், மேல் வகுப்புகளுக்குத் தமிழும் பயிற்றுவிக்கும் ஆசிரியராக அமைத்தார். இதனால் நாவலருக்கு ஆங்கிலம் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் ஐயந்திரிபறக் கற்றுத் தெளிவு பெற ஒரு நல்ல வாய்ப்பும் கிடைத்தது! பதின்மூன்று வயதே நிரம்பிய இவர் போன்றோர் மாணவ ஆசிரியராக விளங்கினார் எவரையேனும் கேட்டதுண்டோ? ஆங்கிலத்தையே தாய் மொழியாகக் கொண்ட துரைமகனார் ஒருவர் தம்மினும் வேறாகிய மொழியையும் சமயத்தையும் கொண்ட நாவலரைப் பாராட்டியது அற்புதமன்றோ? இப்படிப்பட்ட அற்புத நிகழ்ச்சிகள் பல அவர் வாழ்விலே நிகழ்ந்துள்ளன. அவர் அறிஞர்களாலும் தொழத்தக்க விழுமியராகியதும் அந் நிகழ்ச்சிகளாலே யாம்.

இருமொழியும் கற்றுத் துறைபோகிய நாவலரவர்கள் பார்சிவல் துரைக்குத் தமிழாசிரியரானார். அத்துரைமகனார் கிறிஸ்தவ மறையாகிய விவிலிய நூலைத் தமிழில் மொழிபெயர்த்து வந்தார். அப்பணிக்குத் துணை புரியும் தகுதியுடைய தமிழ்ப் புலவர் நாவலர் ஒருவரே எனத் தேர்ந்து சேர்த்துக் கொண்டார். நாவலரும் பலரால் எழுதிய விவிலிய நூல் உரைகளையெல்லாம் ஆழ்ந்து பயின்றார். கிறிஸ்தவ சமயக் கொள்கைகளையும் நன்கு அறிந்து மனத்திலே மறவாது அமைத்துக் கொண்டார். மொழிபெயர்ப்பில் இனிய எளிய தமிழ் நடையைக் கருத்துகள் சிறிதும் மாறுபாடாதவாறு அமைத்துதவினார். சொல்லும் பொருளும் சுவைபட விளங்குதற்கு நாவலர் துணையே காரணம் என்பதைத் துரைமகனார் அறிந்து அகமிக மகிழ்ந்தார். எனினும், அதே சமயத்தில் சென்னையிலுள்ள கிறிஸ்து சபையாரும் கிறிஸ்தவ மறையை மொழிபெயர்க்க ஏற்பாடு செய்திருந்தனர். இதனால் பார்சிவல்துரை, தம் மொழி பெயர்ப்புச் சென்னையிலுள்ள சபையாரால் ஏற்றுக் கொள் ளப்படுமோ என்ற ஐயமும் அச்சமும் கொண்டார். நாவலரை யும் அழைத்துக் கொண்டு சென்னையடைந்தார்.



**சிவ.யதோட்சயன் மங்களேஸ்வரன் தரம் 11, யாழ். மத்திய கல்லூரி**

சென்னையிலுள்ள சபையார் மொழிபெயர்ப்பேசிறந்தது எனச் சென்னையிலுள்ளோர் ஓரவழக்காடினர். ஆகையால், சபையார் அந்தக் காலத்தில் தமிழ்ப் புலமை மிகுந்து விளங்கிய வித்துவான் மகாலிங்க ஐயரை நடுநிலை யாளராகத் தேர்ந்து, இரு மொழிபெயர்ப்புகளையும் ஒப்படைத்தனர். சென்னையில் பிறந்து வாழ்பவராயிருந்த ஐயரவர்கள் புலமை யொன்றையே அளவுகோலாக வைத்து ஆராய்ந்து பார்த்துத் துரைமகனார் மொழிபெயர்ப்பையே சிறந்தது என்று தீர்ப்பளித்தார். காய்தல் உவத்தல் அகற்றி ஒரு பொருட்கண் ஆய்வது அறிவுடைப் பெருமக்கள் செய லன்றோ? அன்று முதல் பார்சிவல் துரை நாவலர்பால் முன்னை யினும் பன்மடங்கு ஈடுபாடும் மதிப்பும் உடையவரானார். சென்னையில் நிகழும் கூட்டங்களில் நாவலர்வரின் அத்துரைமகனார் மதித்து வரவேற்பர் என்பர். இந்த மொழி பெயர்ப்பைப் படித்த வித்துவான் மகாலிங்க ஐயரவர்கள். “யாழ்ப்பாணத்தில் இவ்வளவு சிறந்த தமிழ் உளதோ” எனக் கூறி மகிழ் வெய்தினராம். இளமையில் செய்த முதல் முயற்சியே நாவலருக்குப் புகழைத் தந்து, சென்னையில் வாழ்ந்த பல தமிழ்ப்புலவர்களின் நட்பைப் பெறும் பேற்றையும் ஈந்தது. சென்னையினின்றும் தாயகமான யாழ்ப்பாணம் போந்தார். ஆங்கிலத்தைத் தமிழாக்கலும். தமிழை ஆங்கிலத்திற்கு ஏற்றலும் ஆகிய பணியில் இவருக்கு இணையாவார் எவரு மில்லை என்ற புகழ் யாழ்ப்பாணம் எங்கும் பரவியது! நாவலர் தம் சமயப்பற்றில் எள்ளளவும் குறையாது அம்மொழி பெயர்ப்பில் ஈடுபட்டு வந்ததும் அவர்தம் பேராற்றலே யன்றோ?

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

# திருத்தொண்டு நெறிவாழ உதித்த ஞானத்தவ முனிவர் திருநாவுக்கரசர்



**“திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்”**

**திருநாவுக்கரசர் திருவையாறில் கண்ட கயிலைக் காட்சி**

அப்பர் சுவாமிகள் கயிலை நாதரின் ஆணையினை ஏற்று, கயிலையில் இறைவர் தோற்றுவித்திருந்த குளத்தில் மூழ்கித் திருவருளால் திருவையாற்றுத் திருக்குளத்தினின்றும் வெளிப்பட்டு திருவையாறு திருக்கோயில் வாயிலை வந்திடைகின்றார்.

அக்கணமே திருவையாறு திருக்கோயில் மறைந்து, திசைகள் யாவிலும் திருக்கயிலைக் காட்சி நிறைந்து தோன்றுகின்றது. இறைவரின் தொண்டிற்கு ஆளாக எதிர் நோக்கி இருக்கும் திருமால், நான்முகன், இந்திரன் முதலான தேவர்கள் அனைவரும் உள்ளத்துக் கொண்டு அன்புடன் வழிபட, அதனால் எழுகின்ற ஒலிகள் எங்கும் தனித் தனியே ஒலிக்கவும், நிலைபெற்ற மறைகள் யாவும் தனித் தனியே முழங்கவும்.(பெரிய புராணம் - திருநாவுக்கரசர் புராணம்: திருப்பாடல் 375)

**காணும் அப்பெரும் கோயிலும் கயிலைமால் வரையாய்ப்**
**பேணு மால்அயன் இந்திரன் முதற்பெரும் தேவர்**
**பூணும் அன்பொடு போற்றிசைத்தெழும் ஒலி பொங்கத்**
**தாணு மாமறை யாவையும் தனித்தனி முழங்க**

தேவர்களும், அசுரர்களும், சித்தர்களும், வித்தியா தரர்களும், இயக்கர்களும், பொருந்தும் மாதவர்களும், மாமுனிவர்களும் என்னும் இவர்கள், பக்கங்களில் எங்கும் திரண்டு நிறைந்து விளங்கவும், குவளை மலரையும் வாளையும் போன்ற கண்களை யுடைய தேவ அரம்பையர்களின் பாடலும் முழவு ஒலியும் அழிவில்லாத ஏழு கடல்களின் ஒலியினும் மிகுதியாகப் பேரொலி செய்யவும், கங்கை முதலான தூய தெய்வத் தன்மையுடைய பெரிய நதிகள் பலவும் மங்கல நீர் நிறைந்த பெரும் பொய்கைகளாக வந்து வணங்கவும், எவ்விடத்தும் பரந்த பெரிய சிவகணத் தலைவர் கள் வணங்கவும், ஒலியால் மிகும் பலவகை இயங்களையும் முழக்கிப் பூத கணங்களும் பேய்க்கணங்களும் போற்றவும், இடப வாகனம் நின்றிருக்கவும், திருநந்திதேவர் அங்குள் ளோரை முறைப்படுத்தியிருக்கவும் பெருவியப்புடன் காண்கின்றார்.

இறுதியாய் அவ்வெள்ளி மாமலையின் மிக உயர்ந்ததோர் பீடத்தில், இறைவரின் இடபாகத்து உரிமையுடைய உமையன்னை அருகில் வீற்றிருக்க, பவளமலை போல் எழுந்தருளி இருக்கும் ஆதிமுதற் பொருளான கயிலை மன்னவரைத் வணங்கப் பெறுகின்றார் அப்பர் சுவாமிகள்.(பெரிய புராணம் - திருநாவுக்கரசர் புராணம்: திருப்பாடல் 379)

**வெள்ளி வெற்பின்மேல் மரகதக் கொடியுடன் விளங்கும்**
**தெள்ளு பேரொளிப் பவள வெற்பென இடப்பாகம்**
**கொள்ளு மாமலையாளுடன் கூட வீற்றிருந்த**
**வள்ளலாரை முன் கண்டனர் வாக்கின் மன்னவனார்**

அவ்வாறு கண்ட ஆனந்தக் கடலைத் தம் இருகண் களாலும் முகந்து கொண்டவராய்க் கைகளைத் தம் தலைமீது குவித்துத், திருமுன்பு விழுந்து, பின் எழுந்து உடலெல்லாம் அசையும் படி உலகுயிர்கட் கெல்லாம் தலைவரான சிவபெருமான் திருமுன்பு நின்று கொண்டு, திருநாவுக்கரசு நாயனார் ஆடினார், பாடினார், அழுதார். அத்தொண்டருக்கு அங்கு அதுபொழுது நிகழ்ந்தனவாகிய வியத்தகு மெய்ப் பாடுகளைச் சொல்ல வல்லார் யார்? எவரும் இலர் எனக் குறிப்பிடுகின்றார் சேக்கிழார். (பெரிய புராணம் - திருநாவுக்கரசர் புராணம்: திருப்பாடல் 380)

**கண்ட ஆனந்தக் கடலினைக் கண்களால் முகந்து**
**கொண்டு கைகுவித்(து) எதிர் விழுந்தெழுந்து மெய்குலைய**
**அண்டர் முன்பு நின்றாடினார் பாடினார் அழுதார்**
**தொண்டனார்க்(கு) அங்கு நிகழ்ந்தன யார்சொல வல்லார்**

சுவாமிகள் இச்சமயத்தில் **“பொறையுடைய பூமி நீரானாய் போற்றி” “பாட்டான நல்ல தொடையாய் போற்றி”** எனும் இரு போற்றித் திருத்தாண்டகங்களை அருளிச் செய்கின்றார். (‘வேற்றாகி விண்ணாகி’ திருத்தாண்டகத்தை சுவாமிகள் கயிலையிலேயே அருளிச் செய்து விட்டதாகத் தெய்வச் சேக்கிழார் பதிவு செய்கின்றார்)

இவ்வாறாக, நாயனாரின் உள்ளம் மகிழுமாறு திருக் கயிலையில் வீற்றிருக்கும் இறைவர் தம் துணைவியாருடன் வீற்றிருந்தருள, திருத் தொண்டனார் வணங்கிய வண்ணம் நின்று கொண்டிருக்க, திருவையாற்றில் எழுந் தருளியிருக்கும் தன்மை வெளிப்பட விளங்குமாறு, முன் காட்டியருளிய அக்கயிலைக் கோலத்தைச் சேய்மை யாகுமாறு மறைத்தருளினார்.

அப்பர் பெருமானும் **‘இனி இங்குச் சிவந்த சடையையுடைய இறைவரின் திருவருள் இவ்வகையதோ?’** என்று தெளிவு கொண்டு, உலகம் உய்யும் பொருட்டு **“மாதர்ப் பிறைக் கண்ணி யானை மலையான் மகளொடும்”** எனத் தொடங்குகின்ற, குற்றம் அற்ற தண்ணிய தமிழ்ச் சொல்லால் ஆய திருப்பதிகத்தை **‘மறை முதல்வரான இறைவரைத் திருவையாற்றிலே, பொருந்தி நடப்பனவும் நிற்பனவுமான உயிர்கள் யாவும் காதல் பொருந்திய தம் துணைகளுடனே இயைந்து வரக் கண்டேன்’** என்னும் கருத்துப் படப் பாடினார்.

**“மாதர்ப் பிறைக்கண்ணி யானை**
**மலையான் மகளொடும் பாடிப்**
**போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்**
**யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது**
**காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்**
**கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.”**

**“மாதர்ப் பிறைக் கண்ணியானை”** (தி.4 ப.3 பா.1) எனத் தொடங்கும் பதிகம் காந்தாரப் பண்ணில் அமைந்ததாகும். இப்பாடலில் **‘யாதும் சுவடுபடாமல் ஐயாறு அடைகின்ற போது’** எனவரும் பகுதி, கயிலையிலிருந்து திருவையாற்றிற்குச் சுவடு படாமல் வந்த அருமையைப் புலப்படுத்துகின்றது.

இவ்வாறு திருநாவுக்கரசு நாயனார் கண்டும் தொழுதும் வணங்கியும் சிவபெருமானைப் போற்றியும், திருத்தாண்டகங்களும் திருக்குறுந்தொகையும், திருநேரிசையும் அன்புடைய திருவிருத்தங்களும் முதலான பதிகங்களைப் பாடியும் திருத்தொண்டு களைச் செய்த வண்ணம் திருவையாற்றில் தங்கியிருந்தார்.

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரச நாயனார் புராணம் (373 - 385)

சிவத்திரு. தென்னாடு நிலவன்
படம்-தேவராஜன் நடராஜன் அவர்களின் முகநூலில் இருந்து

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு வடிவாம்பிகை உடனுறை திருமேனியழகர் - திருமயேந்திரப்பள்ளி (மகேந்திரப்பள்ளி)

## தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 6ஆவது திருக்கோயில் திருமயேந்திரப்பள்ளி



**"மந்திர மறைவளர் மயேந்திரப் பள்ளியுள்
அந்தமில் அழகனை அடிபணிந்து உய்ம்மினே"**

தேவர்களின் தலைவனான இந்திரன் வழிபட்டு பேறடைந்த, அழகிய திருச்சிற்றம்பலமுடையான் உறையும் அற்புதத் திருத்தலமே திருமயேந்திரப்பள்ளி அருள்மிகு வடிவாம்பிகை உடனுறை திருமேனி யழகர் திருத்தலம். இவ்விடம் இன்று மகேந்திரப் பள்ளி என்று வழங்கப் பெறுகின்றது.

**அமைவிடம்:** மயிலாடுதுறை, தமிழ்நாடு.

இத்தலம் சிதம்பரம் - சீர்காழிச் சாலையில் கொள்ளிடம் பாலம், ஆச்சாள்புரம் இவறைக் கடந்து செல்லவேண்டும். சாலையில் இடை வளைவுகள் அதிகம் இருப்பதால் அங்காங்கே விசாரித்துக்கொண்டு செல்வது நல்லது. சிதம்பரம், சீர்காழியிலிருந்து (ஆச்சாள்புரம் வழியாக) நகரப்பேருந்துகள் செல்கின்றன. தஞ்சை, கும்பகோணத்திலிருந்தும் பேருந்துகள் செல்கின்றன.

**இறைவர் திருப்பெயர்:** திருமேனியழகர், சோமசுந்தரர்.
**இறைவியார் திருப்பெயர்:** வடிவாம்பாள், வடிவாம்பிகை, வடிவம்மை.
**கோயில் மரம்:** கண்டமரம், தாழை மரம், வில்வம்
**தீர்த்தம்:** மயேந்திர தீர்த்தம், பிரம்ம தீர்த்தம்.
**வழிபட்டோர்:** சம்பந்தர், சேக்கிழார், இந்திரன், மயேந்திரன், சந்திரன் ஆகியோர் வழிபட்டுப் பேறுபெற்ற தலம்.
**பாமாலை:** சம்பந்தர், சேக்கிழார்.

### திருத்தலத்தின் மீது பாடப்பட்டத் திருப்பதிகங்கள்

### திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம்

திரைதரு பவளமும் சீர்திகழ் வயிரமும்
கரைதரு மகிலொடு கனவளை புகுதரும்
வரைவிலா லெயிலெய்த மயேந்திரப் பள்ளியுள்
அரவரை யழகனை யடியிணை பணிமினே.
(3-31-1)

சந்திரன் கதிரவன் தகுபுகழ் அயனொடும்
இந்திரன் வழிபட இருந்தஎம் இறையவன்
மந்திர மறைவளர் மயேந்திரப் பள்ளியுள்
அந்தமில் அழகனை அடிபணிந்து உய்ம்மினே.
(3-31-6)

(இந்திரன் வழிபட்டதை குறிப்பிடும் திருமுறைப் பகுதி)

### சேக்கிழார் பதிகக் குறிப்பு

வைகுமந் நாளிற் கீழ்பால்
மயேந்திரப் பள்ளி வாசம்
செய்பொழில் குருகா வூரும்
திருமுல்லை வாயில் உள்ளிட்
டெய்திய பதிக ளெல்லாம்
இன்புற இறைஞ்சி ஏத்தித்
தையலாள் பாகர் தம்மைப்
பாடினார் தமிழ்ச்சொல் மாலை. (12-28-129)

### திருத்தலச் சிறப்பு

திருக்கோயில் இன்று மக்கள் வழக்கில் மகேந்திரப் பள்ளி என்று வழங்கப்படுகிறது. பண்டை நாளில் (மன்னன் ஆண்ட பகுதி) இருந்த பகுதி கோயிலடிப் பாளையம் என்பது. அருகில் உள்ள தீவுகோட்டை யில் கண்டெடுக்கப்பட்ட நடராசத் திருமேனிதான் கோயிலில் வைக்கப்பட்டுள்ளது.

ஆங்கிலேயர் ஆட்சியில், கிளைவ், இங்கு மன்னன் ஒருவன் ஆண்டு வந்த பகுதியைக் குண்டுவைத்துத் தகர்த்ததாகவும் அப்பகுதி இன்றும் தீவுக்கோட்டை என்று வழங்கப்படுவதாகவும் சொல்லப்படுகிறது. கோயிலிலிருந்து 1 கி.மீ. தொலைவிலுள்ள இவ் விடத்தில் பழமையான கொடிக்கம்பம், கொடி மேடை முதலிய சின்னங்கள் உள்ளன. இங்கு மிக அழகான விஜயகோதண்ட இராமசாமிப் பெருமான் கோயில் உள்ளது. இக்கோயிலுக்கும், தீவுகோட்டை நடராசருக்கும் தனித்தனியே அரசால் மோகினிப் பணம் தரப்பட்டு வருகின்றது. ஆண்டுதோறும் இன்றும் பங்குனித் திங்களில் ஒரு வாரம் கதிரவன் ஒளி சுவாமி மீது படுகிறது. இதை கதிரவன் வழிபாடாகக் கொண்டாடுகின்றனர்.

சந்திரன், சூரியன், பிரமன், இந்திரன் இவர்கள் வழிபட்டுப் பேறுபெற்ற தலம். இதை **"சந்திரன் கதிரவன் றகுபுகழய னொடும் இந்திரன் வழிபட விருந்தவெம் மிறையவன்"** என்னும் சம்பந்தரின் பதிக அடிகள் புலப்படுத்தும்.

**அழகு தரும் சிவன்:** சிவன், அம்மை இருவரும் மிகவும் அழகாக காட்சி தருகின்றனர். எனவே சுவாமி, 'திருமேனியழகர்' என்றும், அம்பாள் 'வடிவாம்பிகை' என்றும் அழைக்கப்படுகின்றனர். இங்கு வந்த திருஞானசம்பந்தர் சுவாமியை, 'அழகர்' என குறிப்பிட்டு பாடியிருக்கிறார். இங்குள்ள சுற்று வீதியில் தென்முகக்கடவுள் (தட்சணாமூர்த்தி) மட்டும் அமைந்திருப்பது சிறப்பாகும்.

### திருத்தல வரலாறு

இந்திரன், கௌதம முனிவரின் மனைவியான அகலிகை மீது ஆசை கொண்டதால், அவரிடம் உடம்பெல்லாம் கண்ணாகும்படி முனிவரால் சபிக்கப்பட்டான். பாவ முத்தி பெறுவதற்காக புவியில் தோன்றிய இந்திரன், பல தலங்களில் இலிங்கத் திருநிலைப்படுத்தல் செய்து, சிவனை வழிபட்டான். அதில் ஒன்று தான் மகேந்திரப்பள்ளி யாகும். சிறப்பு மிக்க (மகா) இந்திரன் வழிபட்டதால், **"மகேந்திரப்பள்ளி"** என்ற சிறப்பு பெயர் இத்தலத் திற்கு ஏற்பட்டதாக ஒரு நம்பிக்கை உண்டு. பிற்காலத்தில் இவ்விடத்தில் சோழர்களால் கோயில் எழுப்பப்பட்டது.

### திருக்கோயில் அமைப்பு

இத்திருக்கோயில் கொள்ளிட நதியின் தென் கரையில் அமைந்துள்ளது. இத்தலத்திலிருந்து 2 கி.மீ. தொலைவில் கொள்ளிடம் கடலில் கலக்கிறது. இந்திரன் (மகேந்திரன்) வழிபட்டதால் இத்தலத் துக்கு மகேந்திரப்பள்ளி என்று பெயர். திருமேனி யழகர் கோயில் கிழக்கு நோக்கி மூன்று நிலைகளை உடைய சிறிய இராசகோபுரத்துடன் காட்சி அளிக்கி றது. கோயில் எதிரே மயேந்திர தீர்த்தம் உள்ளது. இராசகோபுரம் வழியே உள்ளே சென்று வெளி வீதியில் வலம் வந்தால் விநாயகர், காசிவிசுவநாதர், மணக்கோலத்துடன் திருமால், சிவலிங்கம், பைரவர், கதிரவன், சந்திரன் சந்நிதிகள் ஆகியவற்றைக் காணலாம். வீதி வலம் முடித்து, அடுத்துள்ள வௌவால் நெத்தி மண்டபத்தை அடைந்தால், வலதுபுறத்தில் நின்ற திருக்கோலத்தில் தெற்கு நோக்கி காட்சி தரும் அம்பாள் சந்நிதி உள்ளது. மேலும் உள்ளே சென்றால், வலதுபுறம் உள்ள நடராச சபையில் நடராசருடன் சிவகாமியும் மாணிக்கவாசகரும் உடன் காட்சி தருகின்றனர். நேரே சிவலிங்கத் திருமேனியாக மூலவர் கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ளார்.

பங்குனித் திங்களில் ஒரு வார காலம் இலிங்கத்தின் மீது கதிரவன் ஒளி விழுகிறது. திருக்கோயிலில் ஒன்பான் கோள்கள் (நவக்கிரகம்) சன்னதி இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. விநாயகருக்கு தனி சன்னதி இருக்கிறது. இவருக்கு இருபுறமும் ராகு, கேது இருவரும் உள்ளனர். கோயிலின் தீர்த்தம் இந்திர தீர்த்தம் என்கிற மகேந்திர தீர்த்தம். இது கோபுர வாயிலுக்கு எதிரே வெளியே உள்ளது. இந்த தீர்த்தத்தில் ஒரு மண்டலம் நீராடி இறைவனை வழிபடுவோர், தீராத நோயும் நீங்கி நலம் பெறுவர் என்பது நம்பிக்கை.

இத்தலத்து முருகப்பெருமானை அருணகிரிநாதர் தனது திருப்புகழில் பாடியுள்ளார். திருப்புகழில் இத்தலத்து முருகன் மீது ஒரு பாடல் உள்ளது. இத்தலத்தில் முருகப்பெருமான் சிங்காரவேலனாக ஒரு திருமுகத்துடனும் நான்கு திருக்கரங்களுடனும் தனது தேவியர் இருவருடன் நீன்ற கோலத்தில் எழுந்தருளியுள்ளார்.

திருச்சிற்றம்பலம்

சிவத்திரு. தென்னாடு நிலவன்
தகவல் - சைவசமயக் கலைக்களஞ்சியம் நூற்தொகுப்பு

# சிவபூமியில் சிவனைத் தேடி

## ஈழத்துச் சிதம்பரம் என்று புகழப்படும் காரைநகர் திண்ணபுர சிவன் கோயில்



யாழ்ப்பாணத்தின் வடபால் அமைந்துள்ள காரைநகர் பிரதேசத்தில் சைவசமயமும், அதன் பண்பாடும் காலந்தோறும் சிறப்புற்று விளங்கி வருவதற்கு அப்பிரதேசத்தில் அமைந்துள்ள திருக்கோயில்கள் காரணமாக அமைகின்றது. தென்னாட்டில் நாயன்மார்களால் பாடல் பெற்று புகழடைந்த திருக்கோயில்களை நினைந்து நினைந்து வழிபடுவதற்கு என்று ஈழத்தில் பல சைவக் கோயில்கள் நிறுவப்பெற்றன. அந்த வகையில் தில்லைச் சிதம்பரக் கோயிலுக்கு ஒப்பாக ஈழத்துச் சிதம்பரமாக காரைநகர் திண்ணபுர சுந்தர ஈச்சரர் திருத்தலம் சிறப்புப் பெற்று விளங்குகின்றது.

### திருத்தல வரலாறு

காரைநகர் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நகர்களுள் சிறப்பு வாய்ந்தது. காரை நகரில் திண்ணபுரம் எனும் இடத்தில் இச் சிவாலயம் அமைந்துள்ளது. இச் சிவாலயம் தோன்றுவதற்கும் அங்கு சிவபெருமானின் அருளாட்சி நிலைபேறடைந்தமைக்கும் ஆண்டி கேணி ஐயனார் கோயிலும் அங்கு இடம்பெற்ற வழிபாடுமே காரணமாகும். இவ் ஐயனார் கோயில் யாழ்ப்பாணத்தை தமிழ் அரசர்கள் ஆட்சிசெய்த காலத்தில் காவரிப் பூம்பட்டணத்திலிருந்து வருகை தந்த இராமசேது அரசரின் மகனாகிய குளக்கோட்டு அரசன் யாழ்ப்பாணத்தை ஆட்சிபுரியும் காலத்தில் ஐயனார் வழிபாடு வணிகத் துறையின் சிறப்பால் எங்கும் பரவலடைந்தது. அவற்றுள் வியாவில் அமைந்துள்ள ஐயனார் கோயில் பிரசித்தி பெற்றிருந்தது.

கி.பி 1545 ஆம் ஆண்டளவில் போர்த்துக்கேயர் இலங்கையின் கரையோரப் பகுதிகளை கைப்பற்றி ஆட்சி புரிந்த போது, கிறித்தவ சமயத்தை வளர்ப்பதற்கு தடையாக இருந்த சைவக் கோயில்கள் அவர்களால் இடித்தழிக்கப்பட்டன. அப்பொழுதும் கூட இவ் ஐயனார் கோயிலை அவர்களால் அழிக்கமுடியாமல் போயிற்று. ஒல்லாந்தரின் ஆட்சிக் காலத்தில் இக்கோயில் அழிக்கப்பட்டபோது, இக்கோயிலிலிருந்த ஐயனார் படிமம், வழிபாட்டுப் பொருட்கள் நிலவறையில் ஒளித்து வைத்து பூசிக்கப்பட்ட வரலாற்றை ஈழத்துச் சிதம்பர நூலில் கண்டு கொள்ள முடிகின்றது. ஒல்லாந்தர் ஆட்சி வீழ்ச்சியுற்று ஆங்கிலேயர் ஆட்சி மலர்ந்திருந்த காலத்தில் இராமநாதபுரம் சேதுக்கரையைக் காவல் செய்த மறக்குடி மரபினரான ஆண்டி என்னும் பெரியார் ஈழத்திற்கு வந்து அழிவடைந்த கோயில்களைக் கண்டு மனம் நொந்து, மறைந்திருந்த ஐயனார் படிமத்தை கண்டுபிடித்து ஆண்டி கேணி ஐயனார் கோயிலாக உருவாக்கினார்.

இதன் பின்னர் அம்பலவி முருகன் என்பவர் சிவன் கோயில் ஒன்றை ஐயனார் கோயிலுக்கு அருகில் வடபுறமாக அமைத்தார். இவர் இயற்கையாகவே ஒரு சிவபத்தர். ஆதலால் தான் கட்டிய சிவன்கோயிலில் அதற்குரிய சிவலிங்கத்தைப் பெறுவது எங்ஙனம் என்ற சிந்தனையில் மூழ்கி இருக்கும் போது, இறைவன் கனவில் தோன்றி சிதம்பரத்தில் உள்ள சிற்பாச்சாரி ஒருவரிடம் பதினாறு சிவலிங்கங்கள் உண்டென்றும், தம்மால் அங்கு அடையாளம் காண்பிக்கும் சிவலிங்கத்தைப் பெற்று வரும்படி கூறினார். இறைவனின் திருவருளைக் கண்டு வியந்த முருகர் சிதம்பரம் சென்று சிற்பாசிரியரை அணுகி, தான் வந்த நோக்கத்தைத் தெரிவித்து அவரிடமிருந்த பதினாறு சிவலிங்கங்களையும் நோக்க அதில் ஒரு சிவலிங்கத்திலிருந்து வெண்முகில் போன்று ஆவி எழுவதை அவதானித்து, இறையருளை சித்தத்தில் கொண்டு அச்சிவலிங்கத்தைக் கொண்டு வந்து குடமுழுக்கு செய்து அன்று முதல் சிவன் கோயிலாக அவ்விடத்தில் நிலை நிறுத்தியதன் படி ஈழத்துச் சிதம்பரம் என்றும் அழைக்கலாயினர். இங்குள்ள மூர்த்தி சுந்தரேசுவரர் பெருமானும் சௌந்தராம்பிகை என்றும் திருநாமம் இட்டு அழைக்கலாயினர். இவ்வரலாற்றை ஈழத்துச் சிதம்பர புராணம் கீழ்வருமாறு கூறுகின்றது.

“தில்லைத் தலமே யீழத்திற்
றிண்ண புரமாத் திகழ்ந்திடுக.
அல்ல னீக்குங் கூத்தனுனுட
னம்மை யிங்கே எழுந்தருள்க.
செல்வச் சந்த ரேசரெனுஞ்
சிவப்பே ரடியார் நாப்பயில்க.
வல்லி சௌந்த ராம்பிகையாள்
காக்க வென்று வாழ்த்தினரால்”

### திருத்தல தீர்த்தச் சிறப்பு

இத்தலத்தின் தீர்த்தம் துர்வாச சாகரம் என்று அழைக்கப்படுகின்றது, ‘ஈழத்துச் சிதம்பரம்’ என்ற நூலில் இத்தீர்த்தத்தின் சிறப்பு எடுத்துக் கூறப்பட்டுள்ளது. பிதிர்கடன், நீர்க்கடன் முதலிய சடங்குகளும் இத் தீர்த்தத்தில் நிறைவேற்றப்படும். பங்குனி உத்திரம், மாசி மறைமதி (அமாவாசை), ஆடி மறைமதி (அமாவாசை), அக்தோதயம், மகோதயம் போன்ற புண்ணிய காலங்களில் சுந்தர ஈச்சரர் பெருமான் எழுந்தருளி துர்வாச சாகரக் கடலில் புனலாட்டு கொள்வார்.


### இறைதிருபடிமச் சிறப்புக்கள்


ஈழத்துச் சிதம்பரத்தில் வழிபாட்டிற்குப் பயன் படுத்தப்படும் அம்மையப்ப முருகர் (சேமாஸ்கந்த மூர்த்தி), நடராசர் பெருமானது திருவுருவம் ஆகிய இரண்டும் மிகவும் சிறப்புப் பெற்றவை. அம்பலவி முருகரால் அம்மையப்ப முருகரை (சோமாஸ்கந்தர்) சிதம்பரத்திலுள்ள சிற்பியால் வார்க்கப்பட்ட போது அவ்வடிவம் சிதைவுற்று வெளிவந்தது. மனம் நொந்த முருகனார் தனது இருகாதுகளில் தொங்கிய கடுகண்களையும் கழற்றி, இறைவனுக்கு காணிக்கை செலுத்தி, இவற்றையும் உருக்கி வார்க்கும் படி வேண்ட, சிற்பியும் அப்படியே வார்ந்த போது திருவுருவம் மிகச்சிறப்பாக வந்ததைக் கண்டு, முருகனார் ஆனந்த முற்று இறையடி சேர்ந்தார். பின்பு அவரது மகனார் இவ் வடிவத்தைத் தோணியில் ஏற்றி காரைநகருக்கு கொண்டு வந்து, திருநிலைப்படுத்தல் செய்வித்தார். அம்பலவி முருகனார் விரும்பியவாறு மார்கழி திருவெம்பாவை திருவாதிரை திருவிழாவிலும், பங்குனி உத்தர பெருந்திருவிழாவிலும் பிரதான எழுந்தருளியாக இப்படிமம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இதே போல் இங்குள்ள நடராசர் திருவுருவம் ஆகம, சிற்ப சாத்திர இலக்கணங்களிலிருந்து ஒரு இம்மி கூட பிழையில்லா வண்ணம் வார்க்கப்பட்டிருப்பதாக பலரும் வியந்து கூறுகின்றார்கள். இத் திருவுருவம் வார்க்கப்பட்டு எட்டு வருடங்களாக திருக்குட நன்னீராட்டு நடைபெறவில்லை. ஆதலால் அவ்வடிவத்தை நெல்லுக்குள் மறைத்து வைத்திருந்து, பின்னர் 1908 ஆம் ஆண்டு நடைபெற்ற திருக்குட நன்னீராட்டின் பின்னர், மார்கழி திருவாதிரை தேர்த் திருவிழாவிலும், ஆனி உத்தரத்திலும், பங்குனித் தீர்த்தத்திலும் எழுந்தருளி இங்குள்ள பத்தர்களுக்கு சிதம்பரத்தில் எப்படி ஆதிரை அருட்காட்சிப்பேறு கிட்டுகின்றதோ அதே போல இங்கும் காட்சியளித்து அருளுகின்றார்.



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு





### கிரியைகளும் வழிபாடுகளும்

கருவறையில் எழுந்தருளியுள்ள சிவலிங்கப் பெருமானுக்கு சுற்றுத் தெய்வங்களாக அம்மன், நடேசர், சந்திரசேகர், அம்மையப்ப முருகர் (சோமாஸ்கந்தர்), விநாயகர், சுப்பிரமணியர், சண்டிகேசுவரர், சமயகுரவர் என்போர் எழுந்தருளியுள்ளனர். இவர்களுக்கு நாள்தோறும் நித்திய பூசைகள் நடை பெறுகின்றன.

திருவிழாக்களில் மிகப் பிரசித்தி பெற்றது திருவெம்பாவை திருவிழாவாகும். நடராசர் தேர்திருவிழாவும், அவருக்கு நடை பெறும் ஆதிரைத் திருமஞ்சனமும் குறிப்பிடத்தக்கவை. திருமஞ்சனத்தன்று மாலையில் திருவூஞ்சல் நடைபெறும். பங்குனி உத்தரத்தில் நிறைவடையும் படி சிவபெருமான் திருவிழா பத்து தினங்களும், ஆடிப் பூரத்தில் நிறைவடையும் படி அம்மன் திருவிழா பத்து தினங்களும் வருடந்தோறும் நடைபெற்று வருகின்றன. தைப்பூசம், மாசிமகம், ஆவணிச் சதுர்த்தி, கார்த்திகைத் தீபம் என்பனவும் விசேடமாக இங்கு நடைபெற்று வருகின்றன.

மற்றும் ஆண்டி அம்பலவி முருகர் காலத்தில் இருந்து இன்றுவரை சில மரபு வழியான வழிபாட்டு நம்பிக்கைகள் பின்பற்றப்பட்டு வருதலும் இக்கோயிலின் சிறப்பு வழிபாட்டு வழக்கங்களாகப் பார்க்கப்படுகின்றது. எடுத்துக் காட்டாக படையலுக்கு எடுக்கும் அரிசி கையால் உரலில் குற்றப்படுவதும், உப்பில்லாது அமுது செய்வித்தலும், வெள்ளிப் பாத்திரத்தில் மட்டும் பால் எடுத்து திருமஞ்சனம்செய்தலும், திருமஞ்சனத்திற்குப் உபயோகிக்கப்படும் நல்லெண்ணெய் உரலில் எள்ளைத் துவைத்துப் பிழிந்து எடுப்பதும், அடியார்களே திருநீறு தயாரித்து கோயிலுக்கு கொடுப்பதும். அவற்றுள் சில வழக்கங்களாகும்.

இங்குள்ள அந்தணப் பெரியோர்கள் உத்தர கோசமங்கையூரில் இருந்து வந்த மங்களேசுவரக்குருக்கள் பரம்பரையினர் ஆவர். இவர்கள் பரம்பரையினரே தலைமுறை தலை முறையாக பூசை வழிபாடுகளை நிகழ்த்தி வருகின்றனர்.

### திருத்தலத்தின் பெருமை பகரும் இலக்கியங்கள்

ஈழத்துச் சிதம்பரத்தின் மீது புராணம், ஊஞ்சல், மான்மியம், திருப்பதிகம், திருச்சதகம், வெண்பா, என்னும் பிரபந்த இலக்கியப் பாரம்பரியம் வளர்ச்சி பெற்றுள்ளது. இவ் இலக்கியங்களில் தலத்தின் வரலாறு, பௌராணிகக் கதைகள், மூர்த்தியின் கீர்த்தியையும், பத்தியையும், அருளையும் வெளிப்படுத்தும் பத்தர்களின் உணர்வுக் கவிதைகள், தத்துவங்கள் என்பனவும் செறிந்து காணப்படுகின்றன.

இத்தலத்தின் மீது கிட்டத்தட்ட பதினேழிற்கு மேற்பட்ட இலக்கியங்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் காலத்தால் சற்று முந்திய இலக்கியங்களாக கீழ் வருவன விளங்குகின்றன

(1) திண்ணபுர அந்தாதி (1897) - கார்த்திகேயப்புலவர் பாடியது.

(2) திண்ணபுரச் சுந்தரேசுவரப் பெருமான் ஊஞ்சல் (1910) - வித்துவான். மு. சபாரத்தின ஐயர் பாடியது.

(3) திண்ணபுரத் திருப்பதிகம் (1926), திண்ணபுர ஊஞ்சல் (1926) - நாக முத்துப்புலவர் பாடியது.

(4) திண்ணபுர வெண்பா (1926) - பண்டிதர். ச. பஞ்சாட்சரக் குருக்கள் பாடியது.

(5) திண்ணபுர மான்மியம் (1966) - இ. வைத்திய இலிங்கம் ஆசிரியர் பாடியது.

(6) ஈழத்துச் சிதம்பரம் (1961) - சிவத்திரு. ச. கணாதிசுவரக் குருக்கள் பாடியது.

(7) ஈழத்துச் சிதம்பரம் ஸ்ரீ சுந்தரேஸ்வரன் திருப்பதிகம், திண்ணபுர இலிங்கப்பதிகம் (1967) - அருட்கவி, சி.வினாசித்தம்பி பாடியவை.

(8) ஈழத்துச் சிதம்பர புராணம் (1970) - புலவர்மணி. சோ. இளமுருகனார் பாடி, பண்டிதர் இ.பரமேசுவரியாரால் உரை செய்யப்பட்டது. (இந்நூல் 10 சருக்கங்களையும், 806 பாடல்களையும் கொண்டது. ஈழத்தில் எழுந்த தலபுராணங்களுள் ஒன்றாக வைத்து மதிப்பீடும் பெருமைக்குரிய நூலுமாகும்.)

(9) திண்ணபுரச் சுந்தரத் தமிழ்மாலை, திண்புரக்கவிமலர், திண்ணபுரச் திருச்சதகம், ஆண்டிக் கேணி ஐயனார் கவசம் - கவிஞர். சி. பொன்னம்பலம் படியது.

(10) ஈடித்துச் சிதம்பரம் (1984) - திரு. சு. முருகேசு பாடியது.

திருச்சிற்றம்பலம்

தென்னாடு

www.thennadu.org

**Siva P.Ketharan**
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org



# Thiruvalluvar Tamil Philosopher

Tamil literature and philosophy cannot be imagined or discussed about without the mention of Thiruvalluvar. Thiruvalluvar is a timeless teacher, respected for his wisdom on life, moral behavior, and his teachings on how act well. His greatest work, the Thirukkural, keeps offering light and direction to people across generations. It speaks to everyone, everywhere, with its core ideas that never go out of date. In ancient India, during the Sangam period, Thiruvalluvar was considered divine with his literary gift to the world Tirukkural, a masterpiece containing 1,330 verses. Divided into three sections - virtue (Aram), wealth (Porul), and pleasure (Inpam) - each beautifully crafted couplet offers wisdom and ethical principles for a good life in present life and afterlife.

What makes Thiruvalluvar's ideas so powerful is their ability to speak to everyone, regardless of their age, experience or background. The philosophies presented through these couplets serve to address humanity in general, educating the lives of society as a whole. His teachings focus on core values such as fairness, honesty, kindness, and doing what's right. In today's world, where right and wrong can sometimes be blurry, the Thirukkural acts as a moral guide. It helps us navigate difficult choices and live with meaning and purpose.

Furthermore Thiruvalluvar's emphasis on Aram (virtue) reflects Saiva principles inline with Tamil vetham Aram (righteousness) and Vinai concepts as well. His verses advocate for honesty, integrity, compassion, and respect for others, which are fundamental values upheld in Tamil Saiva ethics. Thiruvalluvar's teachings promote the notion of universal brotherhood, a concept that transcends divisions like caste. This resonates deeply with core Saiva principles. Just as a family cares for all its members, Thiruvalluvar urges compassion and understanding for all people, regardless of their background. His vision extends beyond tolerance to a place of active harmony, where differences are seen as enriching humanity rather than creating barriers.

Embracing the teachings of the Thirukkural can profoundly enrich the lives of our tamil society, offering timeless wisdom and ethical guidelines that are as relevant today as they were centuries ago. Thiruvalluvar's masterpiece provides a comprehensive framework for leading a virtuous and fulfilling life, offering universal principles of morality and ethical conduct.

Thiruvalluvar's Thirukkural is not a rule book but a compass, it can help navigate you through life in the right direction. By integrating its wisdom into your daily life, you can cultivate personal growth, build stronger relationships, and contribute to a more meaningful world as Tamil vetham


# Miracles of Saiva Saint Thirugnanasampanthar Swamikal



Siva
P.Abiram
SG

**Last month Summary :** Sampanthar started his journey to Madurai but Appar tried to stop him , by saying that the planets were not favourable to him right now. Sampanthar replied " the planets would always be good to the disciples" Sampanthar reached Madurai. He went to the temple of Alavai Annal and prayed to Sivan. The Queen and the Chief Minister welcomed Sampanthar with devotion and arranged a resort for him to stay in.

The jains approached the king and said, "a boy from Sirkali came



to Madurai to destroy our Jain religion." They got the consent of the King to burn Sampanthar through their Manthira (Evil Karmas) but the Manthira did not work against Sampanthar.Then, at night, they set Sampanthar's resort on fire. Sampanthar directed the fire to get hold of the King. The king fell into a fever. The jains tried to cure him but in vain.

The minister and the Queen, with the permission of the king, requested Sampanthar to cure the king. Sampanthar went to the temple and prayed to Sivan for permission. Then, he came near the King. The king had agreed that whosoever cured him, his religion will be embraced by him as the true religion.

The Jains tried to cure the left side of the king but they failed. Sampanthar cured the right side of the king by applying the holy ashes on him while singing the famous "Thiruneetruppathigam" and it goes as follows:

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆலவாயான் திருநீறே

Manthira maavathu neeru vaanavar melathu neeru
Sunthara maavathu neeru thuthikkappaduvathu neeru
Thanthira maavathu neeru samayathilullathu neeru
Senthuvar vaayumai pankan thiruaalavaayaan thiruneere.

In English this translates to, sacred ash can protect those who meditate on it. It is on the bodies of the celestials in heaven. Adds beauty and is praised by all. It is mentioned in the Akamams, it is the indestructible thing in the saiva religion. Such is the nature of the sacred ash of the god who is in tiruvālavay and who has as one half Umai who has lips like the red coral.

Sampanthar then cured the left side of the King with the divine ashes. The king was entirely healed. He rose up from the bed and bowed at the feet of Sampanthar.

**To be continued...**

# An Outline of Saivism - Dependent Soul

Often we use the words 'I' and 'my'. We say 'I am writing', 'this is my body, mind etc.,' etc,. By using these words, the existence of an entity different from the physical body and the internal organs is inferred.

## Existence of Soul

In sleep the body and the mental faculties do not function. We are not aware of anything. On awakening we realise that we had a good or bad sleep. This proves the existence of this entity which we call the Soul.

In thoughts, words and deeds men vary from each other. Among the millions and millions of people in the world, one is not the same as another. Even animals, birds and other living beings vary from one to another. Hence we can easily conclude that the Souls are many. According to Saivaism every living being has a Soul and Souls are many. Uyir and Aanma are other words for Soul. According to Saivasm, God does not create souls.

## Limitations of Souls

We cannot do everything as we like. Our knowledge is incomplete and often incorrect. Obviously our knowledge, thoughts and actions are limited. This limitation, according to Saivism, is brought about by an entity which acts like an impurity (Malam). It is called Anavam.

Along with anavam there are two other entities called karma and maya. They also act as impurities and hence the three are collectively called mummalam (மும்மலம்) and sometimes as malam. It is also known as pasam, meaning the material of bondage. Because the soul is bonded by pasam, it is called pasu.

Pasu means that which is under bondage by pasam (and not the animal cow which in Tamil is called pasu).

The Souls are classified under three categories according to the nature of their bondage. Souls which are bonded by Anavam alone are called Vignanakalar Aanmas. Those bonded by anavam and karma (kanmam) are called Pralayakalar Aanmas. Those bonded by anavam, karma and maya are called Sakalar Aanmas. We generally belong to this third category. The Pralayakalars and Vignanakalars do not belong to this world. They belong to the celestial world.


Separate from God

Saivism does not accept the view that Soul is part of Brahmam or God. 'Souls are many and separate from God' is the Saiva concept. God has neither beginning nor end. He is eternal. Like God, Souls also have neither beginning nor end. Souls are always like a slave of God. Sundaramurthy Nayanar says that he is an eternal slave of God (மீளா அடிமை உமக்கே ஆளாய்)..

## Dependent Soul

Dependence is the nature of the Soul. It gains worldly experience and leans towards the materials of the world or pasam. Then it acts as an entity of pasam.

When the Soul is free from the fetters of pasam or materials of bondage, it gains God's Grace and leans on Him. Then it acts as one with divine qualities. Because of this nature of the Soul, it is said to possess the quality of dependence. This is called 'Sarnthathan Vannamathal' (சார்ந்த தன் வண்ணமாதல்) which is an important aspect of Soul in Saiva philosophy.



Dr. K. Ganesalingam
Canberra - Australia

In every birth, man is engaged in good and evil acts. Happiness and sorrow are the resultant experience of these acts. Through this experience, he gains knowledge and is able to see things in the correct perspective. He matures spiritually.

When this maturity is reached, he understands that the materials of the world on which he was depending is different from him. He is not the physical body or the inner faculties, but the Anma or Soul. The worldly experience he gained is not in accordance with his true nature. It is good to depend on Siva and gain his grace.

He realises that behind every experience is God's Grace which is ever with him, and it is beneficial to act in God's way. By God's Grace every one of us evolves and ultimately enjoys Divine Bliss.

# The Next Generation of Tamil Youth in Jaffna: A Call for Spiritual Awareness

In the quiet alleys and bustling streets of Jaffna, an alarming concern looms over the spiritual well-being of its youth. Titled "The Next Generation of Tamil Youth," this editorial serves as a poignant critique of a pervasive disconnect from spiritual values among the general young population, despite being extensively schooled in religious studies for a minimum of eleven years, during their formative years.

One cannot overlook the irony, a generation educated in matters of faith, heavily indoctrinated in scripture and spirituality, and rigorously tested, yet largely ignorant of their practical essence. For over a decade, these youth have navigated the corridors of educational institutions where religious studies were a compulsory fixture! Yet, inevitably, the desired outcome seems to have eluded both educators and learners alike. Did we truly believe that force-feeding inconsumable chunks of wisdom, to be tested once and forgotten forever, would serve as a strong spiritual foundation for contemporary minds?

Where, then, did schooling start to falter? Is it a lack of depth or overall curriculum overload? Fundamentally, the answer lies in the method and intent behind the teaching of religious studies. Education, especially in matters as delicate as spirituality, requires more than just learning of scriptures or historical narratives. It necessitates an environment that fosters 'critical thinking, introspection, and above all, personal engagement' with the spiritual principles taught. It is now that I ask the reader, was there ever a chance to discuss one's views on religion and matters of divine faculty in a typical Sri Lankan classroom? If so, where did the discussions lead to, and most importantly the hallmark of schooling, did the exams ever graze upon or



Srisankarshan
Srisatkunarajah
Next Generation Editor
2023 Batch, Jaffna Hindu College

so much as even care about the student's stance or narrative?

The shortcomings of the religious studies education system in the context of Jaffna are manifold. It has often prioritised memorisation over comprehension, dates of rituals over under standing, and theoretical knowledge over experiential learning. This approach, while perhaps "well-intentioned", has inadvertently bred a generation of youth, acquainted with profound doctrine, but remains disconnected from the transformative potential of spiritual practice in their daily lives. The writer, myself must have mumbled at least a hundred complex pieces of divine outpourings including, countless verses from the Saivite Thirumurai, Vaishnavite Divya Prapanthams, and many other compositions. But truth be told, an effort to learn it for a lifetime was never stimulated! For, they were memorised, to be never internalised. Though I'm learning back most of them all anew, I still feel that it's much too advanced spiritual contemplation for a teenager to consume the entire Thiruthondar Thokai, Kanthar Anuputhi, and others, with in-depth meaning, within the span of the respective testing term, while balancing a whole host of other subjects. The clash here would be speed vs comprehension and lifelong retention.

In response, the senior spiritual faculty of our society, especially speakers, writers, researchers, teachers, and dharmic enthusiasts, must shoulder a pivotal responsibility. Beyond the confines of traditional classrooms, they must endeavour to bridge the gap between theory and practice, knowledge and wisdom, and be bold enough to realise the maximums that can fit into a Western classroom and make informed improvements. Their role transcends that of mere instructors; they are custodians of spiritual heritage, entrusted with nurturing a deeper understanding and appreciation of spirituality among the younger generation. The crippling ailment of Gatekeeping explanations and sabotaging opportunities for youth interaction in Spiritual discourses or lectures must end for new growth to begin.

However, amidst these challenges, there is hope. The inherent resilience and curiosity of youth, when rightly guided, can catalyse profound personal and collective growth. There exists an opportunity to reimagine religious studies education, infusing it with contemporary relevance and practical application. This reformation must emphasise critical thinking, ethical reasoning, and the cultivation of empathy – essential attributes that underpin a holistic understanding of spirituality.

In conclusion, the call for a spiritual awakening among the next generation of Tamil youth in Jaffna is not merely an aspiration but a moral imperative. It necessitates a concerted effort from educators, spiritual leaders, and the community at large, to redefine and rejuvenate the educational approach toward spiritual well-being. Let us embark on this journey with resolve, guided by the belief that through informed (enlightened) education and compassionate guidance, we can illuminate the path.

# தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் நான்காம் ஆண்டு நிறைவும் கௌரவிப்பு செய்யும் நிகழ்வும்



பஃறுளி ஆற்றுடன், பன்மலை அடுக்குடன், முதற் சங்கம் கண்ட தென்புலத்தார் நினைவாக, ஆதித்தமிழர்கள் வாழ்ந்த தென்னாட்டில், உலகில் வேறெங்கும் காணாத வகையில், ஐம்பூதங்களுக்கும் சேர்த்து ஒரு தலக்கோயிலாக தென்னாட்டில், சிவபூமி என்றழைக்கப்பெறும் இலங்கை யாழ்ப்பாண மாநகரில் கொக்குவில் **'தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்'** அமைகிறது. அங்கே ஐம்பூதநாதர் அருட்கோலம் கொண்டு எழுந்தருளுகிறார், எந்நாட்டவர்க்கும் இறைவனாகிய தென்னாடுடைய சிவன், இப் புத்தெழில் கோலத்தில் புத்தெழுச்சி பெற்று செந்தமிழ் ஆகம சிவமடம் என்ற பெயரில் அப்பெயரிற்கேற்றால் போல் செந்தமிழ் ஆகம முறைப்படி செந்தமிழ் மந்திரங்கள் ஓதி வேள்விகள் ஆற்றிட ஐம்பூதநாதருக்கு வீறியெழல் (சார்வரி) ஆண்டு விடைத் திங்கள் (வைகாசி) 21 ஆம் நாள் (03-06-2020) புதனன்று விளக்கு (சுவாதி) நாண்மீன், பதின்மும்மைப் பிறைநாள் (திரயோதசி திதி - மூன்றாம் வளர்பிறை) அமுத ஓகம் காலை 9 மணிக்குமேல் 10 மணிக்குள்ளாக விடை வான் வேளையில் வெள்ளி நல்லோரையில் கடவுள் மங்கல நன்னீராட்டு நடைபெற்று, தென்னாட்டின் சிவப்பணிகள் தொடங்கி வைக்கப்பட்டன.

இவ்வாறு தொடங்கி இன்று வரை தன்னிலைமாறாது செந்தமிழில், நிறைமதி, மறைமதி வழிபாடுகள், கழுவாய் வழிபாடுகள், குருபூசைகள், சிவமங்கல நீராட்டுகள், திருக்குட நன்னீராட்டுகள், வாழ்வியல் சடங்குகள் என்பவற்றை நடாத்தி வருகின்றது. அந்தவகையில், அருள்மிகு மனோன்மணியம்மை உடனுறை ஐம்பூதநாதப் பெருமான் திருநிலைப்படுத்தப்பட்டு, நான்கு ஆண்டு நிறைவாகி உள்ள நிலையில், கடந்த வைகாசித் திங்கள் ஒன்பதாம் நாள் (22-05-2024) அன்று ஐம்பூதநாதப் பெருமானுக்கு சங்கு நீராட்டு மிகவும் சிறப்பாக இறை யருளோடு நடந்தேறியுள்ளது.

மேலும் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் நான்காவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, கடந்த வைகாசித் திங்கள் பத்தாம் நாள் (23-05-2024) நிறைமதி அன்று தென்னாட்டுடன் இணைந்து பயணித்து தங்களின் சேவையை வழங்கி தொண்டாற்றி வருபவர்களுக்கான சிறப்பு செய்யும் நிகழ்வும் இடம்பெற்றது.

### கௌரவிப்பு செய்யப்பட்டவர்கள் விபரம்

(1) சிவத்திரு. தியாகராஜா ஜெகசீலன் - தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு மேலாக எங்கள் மடத்திற்கு தேவையான எண்ணை மற்றும் கற்பூரம் உடனாக பூசைக்கு தேவையான பொருட்களை வழங்கி உதவிவரும் தொழிலதிபர் (உரிமையாளர் - வலம்புரி நட்சத்திர விடுதி, யாழ்ப்பாணம்).

(2) சிவத்திரு. சோமசூரியசிங்கம் காண்டீபன் (தென்னரசு) - கோண்டாவிலிருந்து அயர்லாந்து சென்று, அங்கே தமிழ் கடவுளாகிய முருகனுக்கு கோயில் ஒன்றை ஆரம்பித்து, தென்னாடு மடத்தின் வழிப்படுத்தலில் செந்தமிழ் வழிபாடுகளை ஆற்றி வருபவர்.

(3) சிவத்திரு. முருகேசு ஜோதீஸ்வரன் - தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் தொடங்கிய காலத்தில் இருந்து நான்கு வருடங்களாக தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் சைவ மாணவர் சபையினுடாக சைவத்தினை போற்றி வளர்த்து வரும் முன்னாள் சைவ மாணவர் சபையின் தலைவர்.

(4) சிவத்திரு. வனராஜ் சசிராஜ் - தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் தொடங்கிய காலத்தில் இருந்து நான்கு வருடங்களாக தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் சைவ மாணவர் சபையினுடாக சைவத்தினை போற்றி வளர்த்து வரும் தற்போதைய சைவ மாணவர் சபையின் தலைவர்.

(5) சிவத்திரு. ஜீவரட்ணராஜா சஜீவன் - தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் தொடங்கிய காலத்தில் இருந்து நான்கு வருடங்களாக தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் சைவ மாணவர் சபையினுடாக சைவத்தினை போற்றி வளர்த்து வரும் தற்போதைய சைவ மாணவர் சபையின் பொதுச் செயலாளர். மேலும் இவர் கடந்த வைகாசித் திங்கள் பத்தாம் நாள் (23-05-2024) நிறைமதி அன்று தொடக்கம் **'தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் இளம்புலவராகவும்'** பொறுப்பேற்று தனது பணிகளை முன்னெடுத்து வருகின்றார்.

(6) சிவத்திரு. ரவீந்திரன் கஜீவன்- தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் தொடங்கிய காலத்தில் இருந்து நான்கு வருடங்களாக தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் சைவ மாணவர் சபையினுடாக சைவத்தினை போற்றி வளர்த்து வரும் தற்போதைய சைவ மாணவர் சபையின் உபபொருளாளர்.

(7) சிவத்திரு. தென்னாடு நிலவன் - கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக எங்கள் மடத்தின் மேலாளராக சிவத்தொண்டு புரிந்து வருகிறார். தற்பொழுது செந்தமிழ் ஆகம சிவமடத்தின் கணனி தொழில் நுட்ப பிரிவின் மேலாளராக பணியாற்றி வருகிறார். மேலும் இவர் சைவ மாணவர் சபையின் தற்போதைய பொருளாளராகவும் சிவத்தொண்டு புரிந்து வருகிறார்.

(8) சிவத்திரு. நல்லையா சிவானந்தராஜா - கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக எங்கள் மடத்தின் மேலாளராக சிவத்தொண்டு புரிந்து வருகிறார். மேலும் இவர் சைவ மாணவர் சபையின் தற்போதைய நிர்வாகச் செயலாளராகவும் சிவத்தொண்டு புரிந்து வருகிறார்.

(9) சிவத்திரு. தனியொளிசிவம் அகரன் ஐயா - கடந்த இரண்டு ஆண்டுகளாக எங்கள் மடத்தின் வழிபாடுகளை திறம்பட செய்துவரும் செந்தமிழ் அருச்சுனையர்.

(10) சிவத்திரு. ரகுநாதன் அட்சயன் - தீக்கை பெற்றமைக் கான சான்றிதழ் வழங்கப்பட்டது.

**திருச்சிற்றம்பலம்**

## தென்னாடு உள்ளக கௌரவிப்பு நிகழ்வின் நிழல்கள்



சிவத்திரு. தியாகராஜா ஜெகசீலன்



சிவத்திரு. சோமசூரியசிங்கம் காண்டீபன் (தென்னரசு)



சிவத்திரு. முருகேசு ஜோதீஸ்வரன்



சிவத்திரு. வனராஜ் சசிராஜ்



சிவத்திரு. ஜீவரட்ணராஜா சஜீவன்



சிவத்திரு. ரவீந்திரன் கஜீவன்



சிவத்திரு. தென்னாடு நிலவன்



சிவத்திரு. நல்லையா சிவானந்தராஜா



சிவத்திரு. தனியொளிசிவம் அகரன் ஐயா



சிவத்திரு. ரகுநாதன் அட்சயன்

# சிட்னி முருகன் திருக்கோயில் பதினாறாவது ஆண்டு சேக்கிழார் விழா

பெரியபுராணம் அருளிய பெருமகனாரான தெய்வச் சேக்கிழார் பெருமானின் குருபூசையை முன்னிட்டு ஒசுத்திரேலியா சிட்னி முருகன் திருக்கோயில் கல்வி, கலாசார மண்டபத்தில் பதினாறாவது ஆண்டாக சேக்கிழார் விழா சிறப்பாக இடம்பெற்றிருந்தது. இவ்விழாவானது கடந்த ஆனித் திங்கள் 2ம் நாள் (16-06-2024) ஞாயிற்றுக்கிழமை அன்று, சிட்னி சைவ மன்றத்தினராலும், உலக சைவப் பேரவை ஒசுத்திரேலியாக் கிளையினராலும் மிகவும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அன்றைய நாளில் 63 நாயன்மார்களின் திருவுருவப் படங்களுக்கு சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம் பெற்று, திருவுருவப்படங்கள் திருவீதி வலமாக கலாசார மண்டபத்திற்கு எடுத்து வரப்பட்டது. தொடர்ந்து மாணவர் கலை நிகழ்வுகளாக திருமதி. கேதீஸ்வரி பகீரதன் அவர்களுடைய மாணவர்களின் பண்ணிசை, சிட்னி முருகன், கோம்புசு சைவப்பாடசாலை மாணவர்களின் பண்ணிசை மற்றும் நாடகம் என்பவற்றோடு டூன்சைட் தமிழ் சமூக சைவசமய மாணவர்களின் குறுநாடகமும் இடம்பெற்றிருந்தது. மேலும் சிவத்திரு. சிவசண்முகம் குருக்களின் **“கவரி வீசிய கோமான்”** என்ற தலைப்பிலான சொற்பொழிவும் இடம்பெற்றிருந்தது. தொடர்ந்து கோம்புசு தமிழ்க் கல்வி நிலைய மாணவர்களினால் “நாயன்மார்கள் காத்த சிவப் புண்ணியங்கள்” என்ற தலைப்பிலான மாணவர் கருத்தரங்கும் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

திருச்சிற்றம்பலம்














# Why can we not see the Lord Almighty?

**Last month Summary :**

Sivakan , a 7 year old kid, was saying the three incidents described about the lablab creeper, kittens and the old lady indicated that each one had three states of existence: birth, living and death.These changes must have been affected by a controller. He **unanimously ascertained the existence of the Lord Almighty and that 'even an atom cannot move without His presence'.**

We continued our discussion after a few days. 'Now we are sure of the existence of the Lord Almighty. Why is it that we do not know him/her at all?"

First I asked my friend, "Tell me, do you know who you are?"

Immediately he replied, "What a question! Don't I know myself? I know myself perfectly well. See, this is my body. I have legs, hands, stomach, chest, head and other parts in the body."

'OK. Is that all? Do you know yourself completely?'

'Yes, no doubt about it at all.'

'Have you ever seen your face?'

'Well, actually I have only seen my face in the mirror.' 'What about your back? Have you seen it?' 'No. But with the help of two mirrors, one in the front and one in the back I have seen my back.'

'Have you ever seen the various organs in your body like bones, heart, intestine, lungs and so on?'

'Now you got me on that. I know that they are there. I have never seen them directly. They are perceivable with the help of x-ray.'



Then we reflected on what we had discussed so far. 'We are unable to perceive even some of the parts of our own body. We need to use either one or more mirrors or x-ray instruments to see them. We lack the ability to see them directly. The list of things we cannot perceive directly is inexhaustible! We cannot see the light beyond the range of visible wavelength- infrared or ultraviolet rays and so on, having wavelengths shorter or longer than the visible light. The perceptive ability of the eyes is subject to limitations. When we cannot see our own body, how can we see and know everything in the world?

The same is true for all the sense organs - eyes, tongue, nose, ears and skin. All the organs of perception have inherent limitations that limit their abilities to see, taste,smell, hear and touch respectively'.

We concluded that it is next to impossible to perceive and know the omnipotent Lord Almighty with the help of our sense organs having limitations and limited ability.

We are bound by so many limitations that prevent us from knowing the Lord Almighty. But when we free ourselves from these limitations, then He can definitely be known.

**Saiva Philosophy Reference:** The takeaway of this story is just because you can not perceive something with your limited sense organs does not mean it doesn't exist.

# தென்னாட்டு நிகழ்வுகள்



வைகாசித் திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (23-05-2024)



திருஞானசம்பந்த பெருமான் குருபூசை (25-05-2024)



சேக்கிழார் குருபூசை (10-06-2024)



திருமதி. இராஜேஸ்வரி அம்மா திருநாவுக்கரசு அவர்களின் திருவடிப்பேறு வழிபாடுகள் (02-06-2024)



தென்னாடு ஐம்பூதநாதரின் நான்காம் ஆண்டு சங்குநீராட்டு வழிபாடுகள் (22-05-2024)



தென்னாட்டில் தீக்கை வழங்கல் வழிபாடுகள் (23-05-2024)

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் நாற்பத்து ஆறாவது திங்கள் செய்தியிதழ் "தென்னாடு", சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு நல்லூர் "மதி அச்சகத்தில்" அச்சிடப்பட்டு, மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 ஆடவை நல்லோரை ஆனித் திங்கள் 7ம் நாள் நிறைமதி அன்று (21-06-2024 வெள்ளிக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் - HA/4/JA/343.

தொலைபேசி +94 21 222 9722 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org